
மே 2003 www.padippakam.com ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



மதிப்பு கூடுதல் வரி: சிறு வணிகத்துக்கு சுருக்கு!




## கசாப்புக்காரனிடம் 'காருண்யம்' கோரும் மு.க.

www.padippakam.com

# உலக ரவுடி அமெரிக்காவின் மேலாதிக்கப் போர்வெறியைக் கண்டித்து

# புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டங்கள்

பேரழிவு ஆயுதங்களைக் கண்டு பிடித்து அழிப்பது, சதாம் உசேனிடமிருந்து மீட்டு ஈராக் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்குவது - இவைதான் ஈராக் மீது அமெரிக்கா நடத்தி வரும் ஆக்கிரமிப்பு போருக்கு கற்பிக்கப் படும் நியாயங்கள். இதற்கு நேர்மாறாக பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பது, பயன்படுத்துவது, பல லட்சம் அப்பாவி சிவிலியன் மக்களைக் கொன்று குவிப்பது, ஆப்கானைப் போலவே ஈராக்கிலும் பொம்மை அரசை நிறுவி மறுகாலனியாக்கத் துடிப்பது முதலான நடவடிக்கைகள் மூலம் உலகையே அச்சுறுத்தும் ரவுடியாக, பயங்கரவாதியாக நடந்து கொண்டிருக்கிறது அமெரிக்கா. இந்த ரவுடித்தனம் ஈராக்கோடு முடிந்துவிடப் போவதில்லை. சிரியா, வடகொரியா என்று இரத்தப் பசியுடன் ஒரு பட்டியலையே அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்தும், போர் வெறியன் புஷ்சை எதிர்த்தும் உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கும் போர் எதிர்ப்பு பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாம் செயல்படும் பகுதிகளில் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன. ஏழை நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதித்து மேலாதிக்கம் செய்ய அமெரிக்க வல்லரசுக்கு உரிமை உண்டு என்றால், அமெரிக்கப் பொருட்களைப் புறக்கணித்து அதன் பொருளாதாரத்துக்கு நெருக்கடி கொடுக்க உலக மக்களுக்கும் உரிமை உண்டு. இதனடிப்படையில், அமெரிக்காவின் பொருளாதார ஆதிக்கத்தை ஆட்டம் காண செய்யும் வகையில், ''அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களைப் புறக்கணிப்போம்!'' என்ற பிரச்சார இயக்கத்தையும் மேற்கொண்டுள்ளன.

✱ திருவாரூரில் கடந்த ஏப்ரல் 12-ஆம் தேதி நகராட்சி அலுவலகம் எதிரில் பு.மா.இ.மு. நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் முரளி தலைமையேற்றார். தோழர் வீர செந்தில் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் போர் வெறியன் புஷ்சை எதிர்த்தும், அமெரிக்காவை ஈராக்கிலிருந்து வெளியேறும்படி எச்சரித்தும், பன்னாட்டு கம்பெனிகளை விரட்டியடிப்போம் என்று அறைகூவல் விடுத்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

✱ ஈரோட்டில் தலைமை அஞ்சல் அலுவலகம் முன்பு கடந்த ஏப்ரல் மூன்றாம் தேதி பு.மா.இ.மு.வினர் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்திற்கு பு.மா.இ.மு. ஈரோடு நகர செயலர் புஷ்பராஜ் தலைமையேற்றார். பள்ளிப்பாளையம் கிளைச்செயலர் ராமன், கரூர் செயலர் ராமசாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மேலும், ஒரு கையில் உலக உருண்டையையும், மறுகையில் ஏவுகணையும் வைத்துக் கொண்டு நிற்கும் புஷ்சும், அவன் காலடியில் வாஜ்பாய் ஏவல் நாயாய் அமர்ந்திருப்பது போலவும் தோழர்கள் வேடமிட்டிருந்தது அனைவரையும் ஈர்த்தது.

✱ விழுப்புரத்தில் 16.04.03 அன்று திருவெண்ணெய் நல்லூர் வட்டார விவசாயிகள் விடுதலை முன்னணியினர் நடத்திய பேரணி இரயிலடியிலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை நடைபெற்றது. போர் குற்றவாளி புஷ் வேடமிட்டு, பேரணியின் முன்பாக அவனைக் கட்டி செருப்பு மாலை போட்டு இழுத்து வந்த காட்சி மக்களிடம் வரவேற்பை பெற்றது. பின்னர் நடைபெற்ற ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிக்கு தோழர் ஜோதி தலைமையேற்க தோழர் அம்பேத்கர் உரையாற்றினார். இறுதியாக அமெரிக்கக் கொடியைக் கிழித்தெறிந்து புஷ்சை செருப்பால் அடித்து கீழே தள்ளியதும் ''அமெரிக்காவை விரட்ட மக்கள் படையாய் மாறு!'' என்ற பாடலுடன் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பள்ளிச் சிறுவர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள் என பலதரப்பினரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

✱ இராசபாளையத்தில் மார்ச் 31-ஆம் தேதியன்று சங்கரன் கோவில் தெருவில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் பிரச்சாரக் குழு கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இந்நிகழ்ச்சிக்கு தோழர் ஆ. கணபதி தலைமைத் தாங்கினார். தோழர் சம்மனசு, தோழர் கி. சங்கர சுப்பு ஆகியோர் அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் போர்வெறியையும், அதை முறியடிக்க ஓரணியில் திரள வேண்டிய

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்


ஈரோட்டில்...


திருவாரூரில்...



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 18

**இதழ் 7**

மே 2003

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


## மு.க.வின் பொடா எதிர்ப்பு:

# கசாப்புக்காரனிடம் கருணை மனு

நடிகர் ராஜ்குமார் வீரப்பனால் கடத்தப்பட்ட போது, இருபது கோடி ரூபாய் கைமாறியுள்ளதாக கர்நாடக முன்னாள் டி.ஜி.பி. தினகர் தனது புத்தகத்தில் எழுதியிருப்பதை வைத்து, இதில் சம்பந்தப்பட்டவர்களிடம் இலஞ்ச ஒழிப்புப் போலீசார் விசாரணை நடத்துவார்கள் என்று கடந்த ஏப்ரல் 8-ஆம் தேதியன்று தமிழக சட்டமன்றத்தில் பாசிச முதல்வர் ஜெயா ஒரு அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, தனிச்சிறப்பான உரிமையும் வரம்பற்ற அதிகாரமும் கொண்டுள்ள சி.பி.சி.ஐ.டி. போலீசார், கடந்த ஏப்ரல் 11-ஆம் தேதியன்று முன்னிரவில் தனது அலுவலகத்திலிருந்து வேலைகளை முடித்து விட்டுக் கிளம்பிய ''நக்கீரன்'' கோபாலை வழிமறித்து, ஒரு கிரிமினலைப் போல பிடித்து இழுத்துத் தமது வாகனத்தில் கடத்திச் சென்றனர்.

1998-ஆம் ஆண்டில் ராஜாமணி என்ற போலீசு ஆள்காட்டி காணாமல் போன வழக்கை எடுத்து, அந்த வழக்கு விசாரணைக்காக நக்கீரன் கோபாலை அழைத்துச் சென்றதாகவும், அவர் உரிமம் இல்லாத துப்பாக்கி வைத்திருந்ததாகவும், தடை செய்யப்பட்ட தீவிரவாத இயக்கமான தமிழர் விடுதலைப்படையின் பிரசுரங்களை வைத்திருந்ததாகவும் கூசாமல் புளுகிய போலீசார், ஆயுதத் தடைச் சட்டம் மற்றும் தேசவிரோத நடவடிக்கைகளின் கீழ் குற்றம் சாட்டி, ''நக்கீரன்'' கோபாலைப் பயங்கரவாத ''பொடா'' சட்டத்தின் கீழ் சிறையிலடைத்துள்ளனர். வீரப்பனுடன் கூட்டுச் சேர்ந்து பயங்கரவாதச் சதிகளில் ஈடுபட்டார் என்று ஆதாரம் காட்டுவதற்காக, திம்மம் காட்டுப் பகுதிக்குக் கோபாலைக் கொண்டு சென்று துப்பாக்கி முனையில் அவரை அச்சுறுத்தி, அவர் காட்டிய இடத்திலிருந்து பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றியதாக புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளனர், சி.பி.சி.ஐ.டி. போலீசார். ஏப்ரல் 28-ஆம் தேதியன்று பொடா நீதிமன்றத்தில் கோபாலை ஆஜர்படுத்தியுள்ளனர். அதைத் தொடர்ந்து அவர் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

''நக்கீரன்'' கோபாலிடமிருந்து, ''கருணாநிதி சொல்லித்தான் தமிழினத் தீவிரவாதிகளின் உதவியுடன் ராஜ்குமாரை வீரப்பன் கடத்தினான்'' என்று வாக்குமூலம் பெற்றுவிட்டதாகக் கூறி கருணாநிதியையும் ''பொடா''வில் உள்ளே தள்ளத் துடிக்கிறது, பாசிச ஜெயா கும்பல். தமிழ்நாடு விடுதலைப் படையுடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறி விடுதலைச் சிறுத்தைகளின் திருமாவளவன், பா.ம.க.வின் இராமதாசு ஆகியோரையும் கைது செய்ய முயற்சிகள் நடப்பதாகச் செய்திகள் வருகின்றன. நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தின் போது கர்நாடக - தமிழக அரசுகளின் தூதுவராகச் சென்ற கோபாலுக்குத் தொடர்பாளராகச் செயல்பட்ட ''நக்கீரன்'' இணையாசிரியர் காமராஜைக் கைது செய்து, நக்கீரன் பத்திரிகை அலுவலகத்தை இழுத்து மூடி ''சீல்'' வைக்கவும் ஜெயா கும்பல் முயற்சித்து வருகிறது. இதன் முன்னோட்டமாக நக்கீரன் அலுவலகத்திலும், அருப்புக் கோட்டையிலுள்ள கோபாலின் பூர்வீக வீட்டிலும் ''ரெய்டு''கள் நடத்தப்பட்டுள்ளன. நக்கீரனுடன் தொடர்புடைய எழுத்தாளர்கள், வர்த்தகர்கள், சேவை நிறுவனங்கள் என அனைவருமே தம் மீதும் பொடா பாயுமோ என்ற நிரந்தர பீதியில் தள்ளப்பட்டுள்ளனர்.

முன்பெல்லாம் ஒருவரைக் கைது செய்து சிறையிட வேண்டுமென்றால் கஞ்சா, பிரவுன் சுகர் வைத்திருந்தார் என்று சொல்லி போலீசார் பொய் வழக்கு போடுவதென்பது வாடிக்கையாக இருந்தது. இப்போது ஆயுதம் வைத்திருந்தார்; தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்று கூறி போலீசார் எவரையும் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும்.

இப்பாசிச பயங்கரவாத ''பொடா'' சட்டத்தை ஆதரித்து நிறைவேற்றியவர்கள்தான் தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகிய திராவிட பிழைப்புவாதக் கட்சியினர். கழுத்து நரம்பு புடைக்க பொடாவை ஆதரித்து இந்துவெறி பயங்கரவாதிகளின் விசுவாசியாக நின்ற வைகோவே பின்னர் பொடாவுக்குப் பலியாகிச் சிறையில் கிடக்கிறார். நக்கீரன் கோபால் கைது செய்யப்பட்டு பொடாவின் கீழ் சிறையிடப்படலாம் என்ற வதந்தியும் பீதியும் பரவத் தொடங்கியதும், அடுத்ததாக தன்மீதும் தனது வாரிசுகள் மீதும் பொடா சட்டம் பாயக்கூடும் என்று அஞ்சிய கருணாநிதி, திடீரென்று பொடா எதிர்ப்பு வேடங்கட்டி ஆடக் கிளம்பிவிட்டார். ''ஐயோ! பொடா சட்டம் தவறாக ஏவப்படுகிறது!'' என்று அலறுகிறார். மாநில அரசுகளைக் கலைக்கும் அதிகாரமுடைய 356-ஆவது சட்டப்பிரிவு சீறவில்லையே என்று அங்கலாய்க்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com

தமிழகத்தில் எதிர்க்கட்சிகள், பத்திரிகையாளர்களைப் பழிவாங்க பொடா சட்டத்தை தவறாக ஏவுவதாகவும், பொடா சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் புலம்பும் கருணாநிதி, இதே பொடா சட்டம் இதர மாநிலங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதை எதிர்க்கவில்லை. பா.ஜ.க. ஆளும் ஜார்கந்து மாநிலத்தில் இளஞ் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை அப்பாவி மக்கள் மீது பாய்ந்துள்ள போதிலும் அதைக் கண்டித்து வாய் திறக்கவில்லை. டெல்லியிலே கல்லூரிப் பேராசிரியர் கீலானி மீது பொடா சட்டம் ஏவுப்பட்ட கொடுஞ் செயலை எதிர்த்து முணுமுணுக்கக்கூட முன்வரவில்லை.

நக்கீரன் கோபால் பொடாவின் கீழ் கைது செய்யப்படுவதற்கு ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னர் டெல்லியைச் சேர்ந்த ''காஷ்மீர் டைம்ஸ்'' ஆங்கில நாளேட்டின் தலைமை நிருபரான இஃப்திகார் ஜீலானி, பாகிஸ்தானுக்கு இராணுவ இரகசியங்களைக் கடத்தினார் என்று பொய்க் குற்றம் சாட்டப்பட்டு பொடா சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டு மிருகத்தனமாக வதைக்கப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டார். நிரபராதியான அவரை விடுதலை செய்யக்கோரி பத்திரிகையாளர்கள் அரசிடம் வலியுறுத்தியபோது, உள்துறை அமைச்சரான அத்வானி, பொடா சட்டம் தவறாகப் பாய்வதை அறிந்திருந்தும்கூட, ஜீலானியின் கோப்புகளை 17 முறை திருப்பி அனுப்பி விளக்கம் கேட்டார். ஏழுமாத காலம் சிறையில் வதைபட்ட பிறகு, கடந்த ஜனவரியில் ஜீலானி விடுதலை செய்யப்பட்டார்.

காஷ்மீரைச் சேர்ந்த முஸ்லிம் என்ற ஒரே காரணத்துக்காக, பத்திரிகையாளர் ஜீலானியை பொடா சட்டத்தின் கீழ் வதைத்த அரசு பயங்கரவாதி அத்வானியிடம், பொடா சட்டம் தமிழகத்தில் தவறாக ஏவப்படுவதாக முறையிடுகிறார் மு.க.

குஜராத்தின் இந்துவெறி பயங்கரவாத மோடி கும்பல், தனது கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரான ஹரேன் பாண்ட்யாவை பதவிச் சண்டை காரணமாக அண்மையில் சுட்டுக் கொன்றது. இதை பாரதீய ஜனதா கட்சியின் அதிருப்தி கோஷ்டியினரே அம்பலப்படுத்தி சாடிய போதிலும், அத்வானியோ இது முசுலீம் தீவிரவாதிகளின் கொடுஞ்செயல் என்று புளுகி பீதியூட்டினார். அதைத் தொடர்ந்து ஐதராபாத்தைச் சேர்ந்த மூன்று முசுலீம் இளைஞர்களைப் பிடித்து, தீவிரவாதி என்று முத்திரை குத்தி பொடா சட்டத்தின் கீழ் சிறையிலடைத்துள்ளது போலீசு. பயங்கரவாதப் பீதியூட்டவும் இந்துவெறி அரசியல் ஆதாயத்துக்காகவும் பொடா சட்டத்தை 'தவறாக' ஏவிவரும் அத்வானியிடம், ''ஐயோ! தமிழகத்தில் பொடா சட்டம் தவறாகப் பாய்கிறதே!'' என்று புலம்பி ஜெயா அரசு மீது நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் கருணாநிதி.

தனிநபர்களைக் கொலை செய்வது, அச்சுறுத்துவது ஆகியவற்றைத் தடுப்பதற்காக பொடா சட்டம் கொண்டு வரப்படவில்லை; ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தை அச்சுறுத்துவது, பேரழிவை ஏற்படுத்துவது முதலான சதிகள் - கிரிமினல் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைத்தான் பொடாவின் கீழ் கைது செய்ய வேண்டும் என்று பொடாவுக்குப் பொழிப்புரை எழுதுகின்றனர் சட்ட நிபுணர்கள். இதன்படியே பார்த்தால் கூட, குஜராத்தில் 2000 முசுலீம்களைப் படுகொலை செய்து சொத்துக்களை நாசமாக்கி, சொந்த மண்ணிலேயே அவர்களை அகதிகளாக்கி தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்து வெறி பயங்கரவாத மோடி கும்பலைத்தான் முதலில் பொடாவின் கீழ் கைது செய்யவேண்டும். ஆனாலும் இத்திராவிட பிழைப்புவாதக் கட்சிகள் இந்துவெறி பயங்கரவாதிகள் மீது இச்சட்டத்தை ஏவுமாறு இதுவரை கோரவில்லை.



பாசிச காட்டாட்சி: பயங்கரவாத ''பொடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பத்திரிகையாளர் ''நக்கீரன்'' கோபால்.

பிரிவினைவாத - பயங்கரவாத பீதியூட்டி, பொடா சட்டத்தைக் கொண்டு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் மூர்க்கமாகக் கிளம்பியுள்ள நிலையில், காங்கிரசு பெருச்சாளிகள் கருணாநிதியுடன் சேர்ந்து ஜனநாயக கூப்பாடு போடுகின்றனர். ''தீவிரவாதம் ஒழிக்கப்படவேண்டும்; ஆனால், அரசியல் எதிரிகளைப் பழிவாங்கக் கூடாது'' என்று உபதேசிக்கிறார், காங்கிரசு தலைவர் இளங்கோவன். பொடா சட்டத்தின் முன்னோடியான பயங்கரவாத ''தடா'' சட்டத்தை ஏவிக் கூலித் தொழிலாளி முதல் உயர் நீதிமன்ற நீதிபதி வரை சிறையிலடைத்த இப்பாசிஸ்டுகளுக்கு ஜனநாயக உபதேசம் செய்ய என்ன அருகதை இருக்கிறது? மேலும், தாங்கள் ஆளும் மகாராஷ்டிராவில் இதே பொடா சட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டு, அது வெற்றிகரமாகப் பலனளித்து வருவதாகவும் மார்தட்டிக் கொள்ளும் இப்பாசிச பயங்கரவாதிகளுக்கு பொடா தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்று குற்றம் சாட்ட என்ன யோக்கியதை இருக்கிறது? மேலும், மகாராஷ்டிரா வழியில் இப்போது கர்நாடகத்திலும் இதே பொடா சட்டத்தை வேறு பெயரில் ஏவுவதற்கு இக்கயவாளிகள் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

''பொடா'' சட்டத்தை தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வருவதாகவும், தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியேறாதவரை தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளுடன் இணைந்துக் கூட்டுப் போராட்டங்களில் பங்கேற்கவே முடியாது என்றும் சி.பி.எம். கட்சி கூறுகிறது. ஆனால், தடாவுக்குப் பதிலாக பொடா சட்டம் கொண்டுவர, உள்துறை அமைச்சகம் நடத்திய அனைத்துக் கட்சி கலந்தாலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற சி.பி.எம். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சோமநாத் சட்டர்ஜி, ''நாடெங்கும் பயங்கரவாதம் பெருகி வருவதால், அவற்றை ஒடுக்க தனிச்சிறப்பான சட்டம் தேவை என்று பொடாவை ஆதரித்துப் பேசினார்.

மே.வங்க இடது முன்னணி அரசோ, பொடாவுக்கு மாற்றாக மனித



படிப்பகம்

www.padippakam.com

முகம் கொண்ட ''பொடா'' சட்டத்தை தமது மாநிலத்தில் செயல்படுத்த முயற்சித்து வருகிறது. தமிழகத்தில் பொடா எதிர்ப்புக் கூச்சல் போடும் இப்போலி கம்யூனிஸ்டுகள் ஜார்கந்து, உ.பி., ஆந்திராவில் பொடா சட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டபோது அதை எதிர்த்துக் குரலெழுப்பவோ, போராடவோ முன் வரவில்லை. பொடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகக் குற்றம் சாட்டும் போலி கம்யூனிஸ்டுகள், தமிழகம் மட்டுமின்றி பிற மாநிலங்களிலும் நக்சல்பாரி புரட்சியாளர்கள் மீது இச்சட்டம் ஏவப்பட்டுள்ளதை எதிர்ப்பதில்லை. கருணாநிதி கூட, தருமபுரி மாவட்டம் ஊற்றங்கரையில் தமிழக போலீசார் நக்சல்பாரி புரட்சியாளர் சிவாவை 'மோதலில்' கொலை செய்து, மற்றவர்களைச் சுற்றி வளைத்துக் கைது செய்த போது, ''இத்தீவிரவாதிகள் மீது பொடா சட்டம் பாயாமல், வைகோ மீது தவறாக ஏவப்பட்டுள்ளதே'' என்றுதான் அங்கலாய்த்தார்.



**பொடா முறைகேடுகளைக் கண்டித்து நடந்த உண்ணாவிரதக் கூட்டத்தில் உரையாற்றும் சந்தர்ப்பவாதி மு.க: பூனைக்கும் தோழன், பாலுக்கும் காவலன்.**

ஆக, ஓட்டுக் கட்சிகளைப் பொருத்தவரை கம்யூனிசப் புரட்சியாளர்கள், தேசிய இன உரிமைப் போராளிகள் சிறுபான்மை முசுலீம்கள், உழைக்கும் மக்கள் மீது பயங்கரவாத பொடா சட்டம் ஏவப்படுவதில் பிரச்சினை இல்லை. அது தம்மீது பாய்வதைத்தான் எதிர்த்து அவர்கள் பெருங் கூச்சல் போடுகிறார்கள். அவர்களது பொடா எதிர்ப்பு என்பது ஜனநாயக உணர்விலிருந்து உருவானதும் அல்ல.

மேலும், இக்கட்சிகள் அனைத்தும் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கக் கொள்கைகளை விசுவாசமாக ஆதரித்துச் செயல்படுத்தி வருகின்றன. மறுகாலனியாதிக்கமோ, பயங்கரவாத பாசிச ''பொடா'' சட்டத்தைச் செயல்படுத்தக் கோருகிறது. ''பொடா'' சட்டத்தின்படி, இந்திய அரசுக்கும் இதர நாட்டு அரசுகளுக்குமிடையிலான தொழில் - வர்த்தகத்துக்கு இடையூறு செய்பவர்களும், இந்தியாவில் இயங்கும் அன்னிய தொழில் - வர்த்தக நிறுவனங்களுக்கு இடையூறு செய்து சீர்குலைக்க முயற்சிப்பவர்களும் பயங்கரவாதிகளாவர்.

இதன்படி அமெரிக்காவின் கோக் - பெப்சியை எதிர்ப்பவர்கள், அக்குளிர் பானங்களைப் புறக்கணிக்குமாறு பிரச்சாரம் செய்யும் நாட்டுப்பற்றாளர்கள் கூட பயங்கரவாதிகள்! அன்னிய ஏகாதிபத்திய நிறுவனங்களின் கொள்ளையையும் ஆதிக்கத்தையும் பாதுகாக்கும் வகையில், நாடு மறுகாலனியாக்கப்படுவதைக் கவனத்தில் கொண்டு மைய அரசின் சட்ட ஆணையம், ''பொடா'' சட்டத்தில் இத்தகைய கொடிய விதிகளைச் சேர்த்துள்ளது. இந்த உண்மைகளை மூடிமறைத்துவிட்டு, மறுகாலனியாதிக்கக் கொள்கைகளை ஆதரித்துக் கொண்டே ''பொடா''வையும் எதிர்ப்பதாக எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகள் பித்தலாட்டம் செய்கின்றன.

ஆனால், எஞ்சிய ஜனநாயக உரிமைகள் அனைத்தையும் பறித்துக் கொண்டு ஆளும் வர்க்கங்களையும் மறுகாலனியாதிக்கத்தையும் பாதுகாத்து நிலைநாட்டும் வகையில் உருவாக்கப்பட்டதுதான் மிகக் கொடிய ''பொடா'' சட்டம். உரிமைக்காகப் போராடும் நாட்டு மக்கள் அனைவரையுமே பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்டி ஒடுக்கக் கிளம்பியுள்ள பாசிச சட்டம்தான் ''பொடா''. இச்சட்டத்தின்படி குடிமக்கள் அனைவரும் ஒன்று பயங்கரவாதிகளாக இருக்கவேண்டும்; அல்லது போலீசு உளவாளியாக, ஆள்காட்டியாக இருக்கவேண்டும். இச்சட்டத்தின்படி பழிவாங்கும் நோக்கத்தில் எவரையும் பயங்கரவாதியாகக் குற்றம் சாட்டலாம்; யாரையும் கைது செய்து விசாரணையின்றி வதைக்கலாம்; சொத்துக்களைப் பறிமுதல் செய்யலாம். இச்சட்டத்தின் பாசிச பயங்கரத்திலிருந்து எவருமே தப்ப முடியாது.

பாசிச இருள் சூழ்ந்துள்ள வேளையில், எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகள் இந்த அடக்குமுறைச் சட்டத்தைத் தடுத்து நிறுத்திவிடும் என்று இனியும் நம்பி ஏமாற முடியாது. இப்பயங்கரவாத பொடா சட்டத்தை ஆதரித்த குற்றத்துக்காக தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க ஆகிய திராவிட பிழைப்புவாதக் கட்சிகள் தமிழக மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்காத வரை, தமது பதவிகளைத் துறந்து இந்துவெறிக் கூட்டணியிலிருந்து வெளியேறாதவரை அக்கட்சிகளின் பொடா எதிர்ப்புப் பேச்சுக்களை முழுவதுமாக நம்பிவிடவும் முடியாது. தனியார்மயம் - தாராளமயத்தை ஆதரித்துக் கொண்டே ஓட்டுக்கட்சி துரோகிகள் இப்புதிய பொருளாதாரக் கொள்கையைக் கட்டிக் காக்க உருவாக்கப்பட்டுள்ள பயங்கரவாத ''பொடா'' சட்டத்தையும் எதிர்த்து உறுதியாகப் போராடுவார்கள் என்பதற்கு எந்த அடிப்படையும் இல்லை. நாடாளுமன்ற ஓட்டுக் கட்சி அரசியலுக்கு வெளியே புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் தலைமையில் உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து போராடுவதைத் தவிர, ''பொடா'' பயங்கரவாதத்தை வீழ்த்த வேறு வழியுமில்லை. ❑



படிப்பகம்

www.padippakam.com

# ஜெயாவின் காட்டுத் தர்பார் கருணாநிதியின் அமைதிப் புரட்சி

''ஜெயலலிதா அரட்டல் மிரட்டல் தர்பார் நடத்துகிறார். அரட்டல், மிரட்டல், பழிவாங்கலின் மொத்த உருவாகியிருக்கிறார். ஜெயலலிதா நடித்த காலத்தில் மிகச் சிறந்த ஹீரோயின் என்று பெயர் வாங்காமல் போயிருந்தாலும் இப்போது நிஜத்தில் அவரைவிட மிகச்சிறந்த வில்லியைப் பார்க்க முடியாது. தமிழக முதல்வர் சர்வாதிகாரத்தின் எல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டே போவதுபோலத் தெரிகிறது. ஜெயலலிதா இனிமேலாவது திருந்திவிடுவார் என்றுதான் பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், அந்த எதிர்ப்பும் மண்ணைக் கவ்வியது. வைகோவை பொடாவில் ஒன்பது மாதங்கள் சிறையிலடைத்து தனது அராஜகப் போக்கை மீண்டும் நிரூபித்திருக்கிறார்.''

''பல முன்னாள் அமைச்சர்களின் வீடுகளில் ரெய்டுகள், நள்ளிரவுக் கைதுகள் மீண்டும் ஆரம்பமாகின. அமைச்சர்கள், எதிர்க்கட்சிகள், மீடியா என்று யார் எதிர்த்துப் பேசினாலும் சாட்டையைச் சுழற்றுகிறார் அம்மா. சட்டமன்றத்தில் எதிர்க் கருத்துக்கு இடமேயில்லை என்று எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் புலம்புகிறார்கள். தமிழகத்தின் பல்வேறு செய்தித்தாள்கள், வார இதழ்கள் மீது 20-க்கும் மேற்பட்ட வழக்குகள் போட்டிருக்கிறது தமிழக அரசு. தன்னைக் கடுமையாக விமர்சித்து வரும் நக்கீரன் கோபாலை பொடாவின் கீழ் கைது செய்தது, மீடியாவுக்கு ஜெயலலிதா வெளிப்படையான ஒரு மிரட்டலை விடுத்திருப்பதாகவே கருதப்படுகிறது. பழிவாங்கும் விஷயத்தில் வேறெந்த முதல்வரும் அம்மாவை பீட் பண்ண முடியாது''

- மேற்கண்டவாறு எழுதுவது ஒரு நடுநிலை பத்திரிக்கை அல்ல. அம்மாவின் புகழ்பாடும் பார்ப்பன பயங்கரவாத ஊதுகுழலான ''இந்தியா டுடே.''

ஜெயலலிதாவின் பள்ளித் தோழரும், பார்ப்பன பயங்கரவாத சித்தாந்த குருக்களில் ஒருவருமான 'சோ' இராமசாமி நடத்தும் துக்ளக் பின்வருமாறு தலையங்கம் தீட்டியிருக்கிறது:

''தமிழக சட்டசபை ஆளுங்கட்சியின் பொதுக் குழுவாகவும், போலீசு ஆளும் கட்சியின் தொண்டர் படையாகவும் மாறுவது முழுமை பெற்று வருகிறது. சிறை என்பதே, எதிர்க்கட்சியினர் இருக்க வேண்டிய இடம் என்றுதான் முதல்வர் தீர்மானித்து விட்டார். முதல்வரின் செயல்பாடுகளில் திறனும் தெரியவில்லை; மன உறுதியும் காணப்படவில்லை; அரசியல் சாமர்த்தியமும் காட்சியளிக்கவில்லை. தமிழகம் முதலாவது மாநிலமாக மாறும் என்று முதல்வர் முன்பு கூறினர். இப்போது அதைவிட மேலேபோய், தமிழகம் முதல்வரின் மாநிலமாக மாறிக் கொண்டிருக்கிறது.''

''இது நம்மவாள் ஆட்சி'' என்று பகிரங்கமாக பார்ப்பன பயங்கரவாதிகள் ஜெயலலிதா பதவியேற்ற ஆரம்ப ஆண்டுகளில் கொக்கரித்தனர். அன்று அவர்களின் குரல்களைப் பிரதிபலித்த பத்திரிக்கைகள் இன்று ''அபசுரம்'' வாசிக்கின்றனர். ஜெயலலிதா ஆட்சியின் அராஜகத்தை நியாயப்படுத்த முடியாமல் திணறுவதையே இவை காட்டுகின்றன.

1996 சட்டப்பேரவை பொதுத் தேர்தல்களில் ஜெயலலிதா பதவியிழந்தவுடன் துடிதுடித்துப்போய், பிறகு அவர் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு படாதபாடுபட்டது 'மவுண்ட்ரோடு மகாவிஷ்ணு' எனப்பட்ட இந்து நாளேடு. பூசிமெழுகி, விளக்கெண்ணெய்போல எழுதும் அந்த இந்து நாளேட்டின் 'கமெண்டு'களையே பொறுக்க முடியாத ஜெயலலிதா அரசு, முதலில் அவதூறு வழக்குப் போட்டிருந்தது. இப்போது ஜெயலலிதா துதிபாடிகளின் சட்டமன்ற அராஜகம் குறித்து தனது வழமையான ''வெள்ளைக்காரபாணி''யில் நக்கலடித்துவிட்டது, இந்து நாளேடு. அந்த செய்திக் கட்டுரைகளைக் கண்ட ஜெயலலிதாவுக்கு இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு ஆத்திரம் கண்ணை மறைத்திட இந்து நாளேட்டின் மீது உரிமை பிரச்சினையைக் கிளப்பித் தண்டிக்கவும் முடிவு செய்துவிட்டார். ஜெயலலிதாவின் நடவடிக்கைக்குப் பதிலுரை எழுதுவதைப் போல பலமணி நேரம் சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்து தலையங்கமே தீட்டியுள்ளது. இந்து



சட்டப்பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைமைச் செயுலகம் முன் நடத்திய சாலை மறியல்.



படிப்பகம்

www.padippakam.com

நாளேடு.

''ஜெயலலிதா நிர்வாகத்தின் சகிப்பின்மை நாளாக நாளாக புதிய உயரங்களைத் தொடுகிறது. அரசிரயல் எதிரிகள், செய்தி ஊடகம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்கு எதிராக அரசு அதிகாரம் குரூரமாகவும் கொச்சையாகவும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு ஜனநாயக உணர்வின் மீதான ஒரு வெறுப்பைக் காட்டுவது ஆழமான கவலையளிக்கிறது. தனது அரசியல் ஆதாயத்துக்காக அரசு எந்திரத்தை அப்பட்டமாகக் கேடாகப் பயன்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக மீண்டும் ஆட்சிக்கு வந்திருப்பதைக் கருதுகிறது. இந்தப் போக்கில் சட்டம் - ஒழுங்கு இயந்திரம் கூடுதலான நேரம் வேலை செய்து மக்களின் அடிப்படை உரிமைகளைக் காலில் போட்டு மிதிப்பதாகத் தெரிகிறது'' என்று எழுதுகிறது, இந்து.

இதற்குத் தீர்வாக, ''உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நீதிமன்றங்கள் இருந்தாலும் நிவாரணம் கோரி மக்கள் அடிக்கடி நீதிமன்றப் படியேறுவது கவலையளிப்பதாக இருக்கிறது'' என்று புலம்பியிருக்கிறது, இந்து. ''சட்டப்பேரவையில் ஜெயலலிதாவின் பேச்சுக்களை விவரித்து எழுதிய சொற்களை ஒன்று சேர்த்து அநாகரிகமானவை, அரசாங்கத்தின் நற்பெயரையும் புகழையும் சீர்குலைக்கும் உள்நோக்கமுடையவை, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் என்றும் கூறி சட்டப்பேரவையின் கண்ணியத்தைக் குலைத்து உரிமை மீறி விட்டதாக நடவடிக்கை எடுத்துள்ளார்கள்'' என எழுதியது இந்து நாளேடு.

இப்படித் தலையங்கம் தீட்டியதற்காக இந்து நாளேடு மீது மீண்டுமொரு முறையும், அதை மொழிபெயர்த்துப் பிரசுரித்ததற்காக முரசொலி மீதும் உரிமை மீறல் நடவடிக்கை எடுத்துள்ளது, ஜெயலலிதா கும்பல். ஜெயலலிதாவின் அராஜக அக்கிரம வெறியாட்டம் பார்ப்பன பயங்கரவாதிகளின் ஊதுகுழல்களாலேயே சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு மூர்க்கமாகி விட்டதை இது காட்டுகிறது.

தமிழகத்தின் அனைத்துப் பிரிவு மக்கள் மீது பல்வேறுவிதமான தாக்குதல்களை ஜெயலலிதா நிர்வாகம் தொடுத்து வந்தாலும், பார்ப்பன பயங்கரவாதிகளின் ஊதுகுழல்களின் அக்கறைக்குரியவை எதிர்த்தரப்பின் மீதான பழிவாங்கும் நட வடிக்கைகள், செய்தி ஊடகங்கள் மீதான அடக்குமுறைகள், சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கான உரிமை மறுப்புகள், மற்றும் அரசு அதிகாரிகள் மீதான அதிரடி இடமாற்றங்கள் மட்டும்தான். ஆனால், ஜெயலலிதா நிர்வாகம் மேற்கொண்டு வரும் தேசத்துரோக, மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளோ ஏராளமாகித் தொடர்கின்றன.

**ஜெயலலிதா அரசு நிர்வாகமும் கட்சியும் சட்ட விதிமுறைகளையும் ஜனநாயக மரபுகளையும் பற்றி ஒழுகவேண்டும்; தமது குலகுரு ராஜாஜியின் வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பார்ப்பன பயங்கரவாத ஊது குழல்கள் கோருகின்றன.**

✦ ஏழை - எளிய மக்கள் வாழவே முடியாது, தற்கொலை செய்து கொண்டு மடிவது தவிர வேறுவழியே இல்லை என்கிற வகையில் விலைவாசி, வரிகள், கட்டணங்கள் பல ஆயிரம் கோடிக்கு விதிக்கப்படுகின்றன. ஆலைத் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளிகள், கூலி உழைப்பாளர்கள் என அனைத்துப் பிரிவினருக்கும் வாழும் வழிவகைகள் மறுக்கப்படுகின்றன. மாணவர்கள், மருத்துவர்கள், வழிக்கறிஞர்கள், அரசு ஊழியர்கள் என்று பல்வேறு பிரிவினர்களுக்கான சலுகைகள் - உரிமைகள் பறிக்கப்படுகின்றன. குடிநீர், மின்சாரம், போக்குவரத்து, சாலைவசதி, மருத்துவம், சுகாதாரம் போன்ற ஏழை - நடுத்தர மக்களின் அடிப்படைத் தேவைகளை கொஞ்சமாவது நிறைவேற்றித்தரும் ஏற்பாடுகளுக்கு மூடுவிழா நடத்துவதோடு, அதற்காக உருவாக்கப்பட்டிருந்த அரசு நிறுவனங்கள் பணம் பறிக்கும் நோக்கத்துக்கு மாற்றப்பட்டு விட்டன.

✦ ஆளும் கும்பலுக்கும் அதன் கட்சிக்கும் கொள்ளையடிப்பதற்கு அவசியமான - வசதியான திட்டங்களையும், பன்னாட்டு தொழில்கழகங்கள், ஏகாதிபத்திய நிறுவனங்கள், தனியார் தரகு அதிகார முதலாளிகள் முதலீடு பெருகுவதற்கான திட்டங்களையும் பற்றி மட்டுமே ஜெயலலிதா அரசு சிந்திக்கிறது. இதற்காக தமிழ் நாட்டின் மூலாதாரங்களையும் செல்வங்களையும் சூறையாடி வருவதோடு விவசாயத்தையும், தொழில்களையும் நாசமடையச் செய்து வருகிறது. உலக வங்கியின் உத்திரவுப்படி செய்வதாகப் பகிரங்கமாக அறிவித்து புதிய பொருளாதாரக் கொள்கை, கட்டுமானச் சீரமைப்பு என்கிற பெயரில் நாட்டை மறுகாலனியாக்கும் நடவடிக்கையில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக்கி வருகிறது.

✦ கிரிமினல் குற்றக் கும்பல்கள், காட்டு மரங்கள் - ஆற்று மணல் - கல்குவாரிகள் எனப் பொதுச் சொத்துக்களை - இயற்கை வளங்களை சூறையாடும் கிரிமினல் கும்பல்கள், கள்ளச் சாராய - கந்துவட்டிக் கொள்ளையர்கள் போலீசின் கூட்டோடு கொண்டாட்டம் போடுகிறார்கள். அதேசமயம் இவர்களை எதிர்த்தும், நியாயமான கோரிக்கைகளுக்காகவும் அடிப்படை வசதிகளுக்காகவும் போராடும் பல்வேறு பிரிவு மக்களும் போலீசை ஏவி மிருகத்தனமாக ஒடுக்கப்படுகின்றனர். அதேசமயம், போலீசுக்கும் அரசு உயர் அதிகாரிகளுக்கும் ஏராளமான சலுகைகளும், வசதிகளும், ஊதிய உயர்வுகளும் வாரி இறைக்கப்படுவதோடு, வரம்பற்ற அதிகாரமும் அளிக்கப்படுகிறது. சட்டமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்க்கட்சிகள் அடக்கி ஒடுக்கப்பட்டுப் பழிவாங்கப்படுவதோடு, கைதுகள், சோதனைகள், வழக்குகள், தேர்தல் அராஜகங்கள் என்று நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பிலேயே பாசிச பயங்கரவாத ஆட்சி நடைபெறுகிறது. பயங்கரவாத, தீவிரவாத, பிரிவினைவாத முத்திரை குத்தப்பட்ட எவரையும் கேள்வி முறையின்றி பொடாவிலும் தள்ளலாம், சுட்டும் கொல்லலாம் என்கிற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜெயலலிதா அரசு நிர்வாகமும் கட்சியும் சட்டவிதிமுறைகளையும் ஜனநாயக மரபுகளையும் பற்றி ஒழுகவேண்டும்; தமது குலகுரு ராஜாஜியின் வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பார்ப்பன பயங்கரவாத ஊது குழல்கள் கோருகின்றன. ''வாராது வந்த நம்மவாள் ஆட்சி வீணாக வீழ்ந்துவிடக் கூடாது'' என்கிற உந்துதல்தான் இதற்குக் காரணம். இதே கரிசனையோடு ஜெயலலிதாவுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்துள்ள பா.ஜ.க.வும் அணுகுகிறது.

சரி! நாளுக்குநாள் கொடூரமாகி வரும் இந்தப் பார்ப்பன பயங்கரவாத

தொடர்ச்சி 25-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

## மதிப்புக் கூட்டு வரி:

# சிறுவணிகத்துக்குச் சுருக்கு

தாராளமயத்தின் பின் சீர்திருத்தம் என்ற போர்வையில் குடியுரிமைச் (சிவில்) சட்டத்திலும், தொழிலாளர் நலச் சட்டத்திலும் கை வைத்த அரசு, இவற்றையடுத்து வணிக வரிச் சட்டங்களிலும் சீர்திருத்தம் கொண்டு வரத் துடிக்கிறது. இதனின் முதல் கட்டமாக, தற்பொழுது அமலில் உள்ள ஒருமுனை வணிக வரிச் சட்டங்களைத் தூக்கிக் கடாசிவிட்டு, அதனிடத்தில் மதிப்புக் கூட்டு வரி என்ற 'புதிய' வரி மதிப்பு முறையை நாடெங்கும் கொண்டுவர மைய - மாநில அரசுகள் தயாராகி வருகின்றன.

சிவில் சட்டத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தபொழுது, இதனால் வழக்குகளை விரைவாக முடிக்க முடியும் என்றார்கள்; தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்திவிட்டு, இனி வேலை வாய்ப்பு கிடுகிடுவென்று உயரும் என்றார்கள். அதுபோலவே இப்பொழுதும், இந்த மதிப்புக் கூட்டு வரி முழுமையாக நடைமுறைக்கு வந்துவிட்டால், வரி ஏய்ப்பை பெருமளவில் தடுத்துவிடலாம்; வரி விதிப்பு முறை வெளிப்படையாக இருக்கும் என்று கூறி, இந்த வணிவரிச் சீர்திருத்தத்தை நியாயப்படுத்துகிறார்கள்.

ஏற்கனவே இருந்து வரும் வணிக வரி விதிப்பு முறை மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுவதால், போட்டியின் சமநிலை சீர்குலைந்து விடுகிறது; இந்தியா, ஐக்கியப்பட்ட சந்தையாகப் பரிணமிப்பதைத் தடுக்கிறது. அதனால், ஒரே சீரான மதிப்புக் கூட்டு வரி விதிப்பு முறை அவசியம் என்கிறார்கள். இந்தியாவின் 'தேசிய' ஒருமைப்பாட்டைக் காக்க ''பொடா''; இந்தியாவின் சந்தை ஒருமைப்பாட்டைக் கட்ட மதிப்புக் கூட்டு வரி!

''ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த மதிப்புக் கூட்டு வரி சில்லறை சிறு வணிகத்திற்குக் குழி பறித்துவிடும்; சங்கிலித் தொடர் வணிக நிறுவனங்களும், சூப்பர் மார்க்கெட் கடைகளும், பன்னாட்டு நிறுவனங்களும்தான் இந்த வரியால் ஆதாயமடையும்; பொருட்களின் விலைகளும் உயரும்'' என்ற காரணங்களை முன் வைத்து வணிகர்கள் இந்த வரியை எதிர்க்கின்றனர்.

இந்த வரிக்கு எதிராக மார்ச் 31 மற்றும் ஏப்ரல் 1 ஆகிய இரண்டு நாட்களும் இந்தியாவெங்கும் வணிகர்களால் கடையடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. தமிழகத்தில் இக்கடையடைப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்திய ஒரே காரணத்திற்காகவே தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையனையும் அப்பேரவையின் சில நிர்வாகிகளையும் பொய் வழக்குப் போட்டு உள்ளே தள்ளினார், ஜெயா.

தாராளமயம் இந்தியாவிற்குள் நுழைந்தவுடனேயே, இந்த வரியையும் இந்தியாவில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைகளைச் செய்ய, மாநில நிதியமைச்சர்களைக் கொண்ட கமிட்டியை மைய அரசு நியமித்தது. இந்த கமிட்டியின் தலைவராக இருப்பவர், தாராளமயத்தை எதிர்ப்பதாகக் கூறும் சி.பி.எம். கட்சி ஆளும் மே.வங்க மாநில நிதியமைச்சர் ஆசிம் தாஸ்குப்தா. இந்த வரிச் சீர்திருத்தம், மாநிலங்களிடம் உள்ள வணிக வரி விதிக்கும் உரிமையைப் பிடுங்கி, இந்த கமிட்டியின் வழியாக மைய அரசிடம் திணிக்கிறது.

இந்த கமிட்டியின் முடிவுப்படி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே மதிப்புக் கூட்டு வரி இந்தியாவெங்கும் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், வணிகர்களின் எதிர்ப்பின் காரணமாகவும், மாநில அரசுகளின் தயக்கம் காரணமாகவும், இந்தக் கெடு, ஏப்ரல் 1, 2001-லிருந்து ஏப்ரல் 1, 2002-க்கும், பின்னர் ஏப்ரல் 1, 2003-க்கும் மாற்றப்பட்டது. இதன் பின்னும் அரியானா மாநிலத்தைத் தவிர, பிற மாநிலங்கள் மதிப்புக் கூட்டு வரியை அமலாக்க முன்வரவில்லை. இதனால் மைய அரசு, அனைத்து மாநிலங்களும் ஒன்றாக ஒத்துழைக்கும்போது மட்டுமே மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்த முடியும் எனக் கூறி, இந்த இழுபறிக்கு ஓர் அரைப்புள்ளி வைத்து விட்டது.

மைய அரசு மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதை மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்துள்ளதே தவிர, அதைக் கைகழுவி விடவில்லை. ஏனென்றால், இந்த வரிச் சீர்திருத்தத்தை அமல்படுத்தும்படி இந்தியாவை உலக வங்கி நிர்பந்தித்து வருகிறது.

**மதிப்புக் கூட்டு வரி:**
**புதிய மொந்தை பழைய கள்ளு!**

இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடைமுறையில் இருந்த பலமுனை வரி விதிப்பு முறைதான், இப்பொழுது சில மாறுதல்களோடு மதிப்புக் கூடுதல் வரியாகப் பொது மக்களின் தலையில் விழப் போகிறது.

ஒரு பொருள், அது உற்பத்தியாகும் இடத்தில் இருந்து தொடங்கி நுகர்வோரின் கைக்குச் செல்லும் வரையில், வர்த்தகப் பரிமாற்றம் நடைபெறும் ஒவ்வொரு இடத்திலும் வரி விதிக்கப்படுவதுதான் பலமுனை வரி. இதற்கும், மதிப்புக் கூட்டு வரிக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், வர்த்தகப் பரிமாற்றம் நடைபெறும் ஒரு முனையில், ஏற்கனவே அப்பொருளின் மீது விதிக்கப்பட்டுள்ள வரி நீக்கப்பட்டு, அப்பொருளின் மொத்த மதிப்பு மீது மட்டுமே மதிப்புக் கூட்டு வரி விதிக்கப்படும். பலமுனை வரி விதிப்பு முறையில் பொருளின் மதிப்போடு, ஏற்கனவே கட்டிய வரியையும் சேர்த்து வரி விதிக்கப்படும்.

ஒரு எடுத்துக்காட்டுடன் இதைப் பார்ப்போம்:

ஒரு சரக்கு உற்பத்தியாளர், அறுபது ரூபாய் அளவிற்கு தனக்குத் தேவையான மூலப் பொருளை வாங்கச் செல்கிறார் என வைத்துக் கொள்வோம். இந்த விற்பனையின் பொழுது, அம்மூலப்பொருளின் மதிப்பின் மீது (மதிப்பு என்பது மூலப் பொருள் விற்பனையாளரின் இலாபத்தையும் உள்ளடக்கியது) 10 சதவீத மதிப்புக் கூடுதல் வரி விதிக்கப்படுகிறது எனக் கொண்டால், அவர் ரூ. 66/- கொடுத்து, தனக்குத் தேவையான மூலப்பொருளை விலைக்கு வாங்குவார். மூலப் பொருளின் மீது வசூலிக்கப்பட்ட வரி ரூ. 6/- அரசுக்குச் செல்லும்.

அடுத்து, இந்த மூலப் பொருளைப் பயன்படுத்திச் சரக்கைத் தயாரித்த



படிப்பகம்

www.padippakam.com

பிறகு, உற்பத்தியாளர் அதன் மதிப்பைத் தீர்மானிக்க வேண்டும். சரக்கின் மதிப்பை, மூலப்பொருளின் மதிப்பு + கூலி உள்ளிட்ட உற்பத்திச் செலவு + இலாபம் ஆகியவற்றைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். சரக்கின் மதிப்பைத் தீர்மானிக்கும் பொழுது, மூலப்பொருளின் மீது விதிக் கப்பட்ட வரியைச் சேர்த்துத் தீர்மா னிக்கக் கூடாது.

உற்பத்தியான சரக்கை, ஒரு மொத்த வியாபாரிக்கோ / சில்லறை வியாபாரிக்கோ விற்கும்பொழுது, அதன் மதிப்பு மீது மீண்டும் 10 சதவீத மதிப்புக் கூட்டு வரி விதிக்கப்படும். சரக்கின் மதிப்பை ரூ. 100/- எனக் கொண்டால், சரக்கு, வரியையும் சேர்த்து ரூ. 110-க்கு விற்கப்படும். இந்த இரண்டாவது முனையில் வசூ லிக்கப்பட்ட 10 ரூபாய் வரியில், சரக்கு உற்பத்தியாளர் ஏற்கெனவே தான் கட்டிய வரி ரூ. 6-ஐக் கழித்துக் கொண்டு, மீதமுள்ள நான்கு ரூபாயை வரியாக அரசுக்குக் கட்ட வேண்டும்.

இந்தப் பொருள், விற்பனையின் இறுதிக் கண்ணியான நுகர்வோரைச் சென்றடையும் பொழுது, அதன் மதிப்பு ரூ.200/- எனக் கொண்டால், ரூ. 20/- மதிப்புக் கூட்டுவரியாக நுகர் வோரிடம் இருந்து வியாபாரி வசூ லித்து விடுவார். இந்த இருபது ரூபாயில், வியாபாரி ஏற்கெனவே கட்டிய வரி பத்து ரூபாயைக் கழித்துக் கொண்டு, மீதி பத்து ரூபாயை அர சுக்குச் செலுத்துவார்.

விற்பனையின் முதல் கட்டத்தில் 60/- ரூபாயாக இருந்த பொருளின் மதிப்பு, இரண்டாவது கட்டத்தில் 100/ - ரூபாயாகவும், நுகர்வோரை அடை யும்பொழுது ரூ. 200/- ஆகவும் உய ருகிறது. விற்பனையின் முதல் கட்டத்தில் ஆறு ரூபாயை வரியாக வசூலித்துக் கொண்ட அரசு, இரண்டா வது கட்டத்தில் நான்கு ரூபாயையும், மூன்றாவது கட்டத்தில் பத்து ரூபா யையும் வசூலித்ததன் மூலம், அப்பொ ருளின் மதிப்பின் மீதான மொத்த வரி யையும் (ரூ. 20) பெற்றுக் கொண்டு விடுகிறது.

இப்படியாக, விற்பனையின் எந்த வொரு கட்டத்தை எடுத்துக் கொண்டாலும், அந்தக் கட்டத்தில் பொருளின் மதிப்பு எவ்வளவோ, அதற்குண்டான மதிப்புக் கூட்டு வரியை, அரசு திரட்சி முறையில் பெற்று விடுகிறது. பொருளை விற்பனை செய்கின்றவர்கள், அப்பொ ருளை வாங்கும் பொழுது தாங்கள்



லுதியானா நகரில் மதிப்புக் கூட்டு வரி கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் வணிகர்கள்.

கட்டிய மதிப்புக் கூட்டு வரியை, விற்ப னையின் பொழுது வசூலிக்கும் வரியில் இருந்து கழித்துக் கொண்டு விடுகிறார்கள். இறுதியாக, அப்பொருள் நுகர்வோரைச் சென்ற டையும் கட்டத்தில், அப்பொருளின் மொத்த மதிப்பு எவ்வளவோ, அதற் குண்டான மொத்த மதிப்புக் கூட்டு வரி யையும் அவரே செலுத்த வேண்டி யவர் ஆகிறார்.

**மதிப்புக் கூட்டு வரியால் நுகர்வோனுக்கு ஆதாயமுண்டா?**

மதிப்புக் கூட்டு வரியை அமல்ப டுத்துவதால், தமிழகத்திற்கு ஆண்டொன்றுக்கு 600 கோடி ரூபாயும், கர்நாடகத்திற்கு 700 கோடி ரூபாயும், ஆந்திராவிற்கு 400 கோடி ரூபாயும் வருமான இழப்பு ஏற்படும் எனக் கூறப்படுகிறது. இதைக் கேட்கும் பொழுது, மதிப்புக் கூட்டு வரியினால் பொருட்களின் விலை குறையக்கூடும் என்ற நப்பாசை நமக்கு ஏற்படலாம். ஆனால், இதுவரை வரி விலக்கு அளிக் கப்பட்டிருந்த உப்புக்கு 4 சதவீத மதிப்புக் கூட்டு வரி விதிக்கப்பட்டுள் ளதைக் கேள்விப்படும்பொழுது, நமது நப்பாசை நிராசையாகி விடுகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருட்க ளுக்கு மதிப்புக் கூட்டு வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு அரிசியின் மீது இரண்டு ரூபாய் வரி விதித்திருப்பதை இங்கு நினைவு படுத்திக் கொள்ளுங்கள். அந்த வரி வருமானம் போய்விடும் என்பதனால் கூட தமிழக அரசு 'நட்டக் கணக்கு' காட்டலாம்.

பாசிச ஜெயா அரசு பதவியேற்ற இரண்டே ஆண்டுகளுக்குள் தமிழக மக்களின் மீது 5000 கோடி ரூபாய்க்கு மேல் வரியைப் போட்டுத் தீட்டியுள் ளது. இந்த நிலையில் மதிப்புக் கூட்டு வரியினால் தமிழக அரசுக்கு 600 கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்படும் என ஜெயா கும்பல் புலம்புவது புள்ளி விவர மோசடியாகத் தான் இருக்கும்.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தவிர்த்து, வேறெதற்கும் வரி விலக்கு கிடையாது. தங்கம், வைரம் போன்ற அரிய உலோகப் பொருட்களின் மீது 1 சதவீத வரியும்; மதுபானங்கள், சிகரெட் போன்ற பொருட்களுக்கு 20 சதவீத வரியும்; மூலப் பொருட்களுக்கு 4 சதவீத வரியும்; பிற பொருட்கள் அனைத் திற்கும் 12.5 சதவீத வரியும் விதிக்கப் படும்.

இவைதான் நாடெங்கும் அமலாக வுள்ள மதிப்புக் கூட்டு வரியின் அடுக் குகள். மாநில அரசுகளுக்கு ஏற்கெ னவே கிடைத்து வரும் விற்பனை வரி வருமானத்தில் எவ்விதப் பங்கமும் வந்துவிடாதபடிதான், இந்த வரி அடுக் குகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இதையும் தாண்டி மாநில அரசுகளுக்கு வரி இழப்பு ஏற்பட்டால், அதை ஈடு கட்ட ''ஜவுளி, ஜீனி, புகையிலை ஆகிய பொருட்களின் மீதும், சேவை களின் மீதும்'' வரி விதித்துக் கொள்ள மாநில அரசுகளுக்கு உரிமை அளிக்கப் பட்டுள்ளது. அதாவது, மதிப்புக் கூட்டு வரி அமலான பின்னர் மாநில அரசு களின் வரிக் கொள்ளை இன்னும் தீவி ரமாகவும், விரிவாகவும் நடைபெறுமே


படிப்பகம்

www.padippakam.com

தவிர, குறைவதற்கு வாய்ப்பு இல்லை.

இது ஒருபுறமிருக்க, எல்லா மாநில அரசுகளுமே தங்களின் பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுசெய்ய, மக்களின் மீது வரிக்கு மேல் வரி போடுவதைத் தான் நம்பியுள்ளன. இதற்கு ஒரு வலுவான ஆயுதமாக மதிப்புக் கூட்டு வரி பயன்படும்.

இது ஒருபுறமிருக்க, விற்பனையின் ஒவ்வொரு கட்டத்திலும் பொருளின் மதிப்பை உற்பத்தியாளரோ அல்லது வியாபாரியோதான் தீர்மானிக்கிறார்கள். அதற்கு எவ்விதக் கட்டுப்பாடும் கிடையாது. மேலும், பொருளின் மதிப்பைத் தீர்மானிக்கும் பொழுது ஏற்கனவே கட்டிய வரியைக் கழித்துக் கொண்டு தீர்மானித்தார்களா, இல்லையா என்பதையும் நுகர்வோர் அறிந்து கொள்ள முடியாது. ஏற்கனவே கட்டிய வரியையும் சேர்த்து தீர்மானித்தால் மதிப்புக் கூட்டு வரி, பலமுனை வரியாகி, அரசுக்கு வருமானம் அதிகம் கிடைக்கும்.

''அப்படியெல்லாம் நடக்காது; ஏனென்றால் சந்தையில் போட்டி இருக்கிறது'' என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். இது ஒரு குருட்டு நம்பிக்கை. ஏனென்றால், சந்தையைப் பன்னாட்டு நிறுவனங்கள்தான் கட்டுப்படுத்துகின்றன. இதனால் பொருளின் மதிப்பை அவர்களின் விருப்பப்படி தீர்மானிக்கலாம். எனவே, மதிப்புக் கூட்டு வரி அமலானால், பொருளின் விலை குறையும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

இந்த மதிப்புக் கூட்டு வரியினால் பொது மக்களுக்கு என்னதான் கிடைக்கும் என்றால், வாங்கிய பொருட்களுக்கு வரி போடப்பட்ட ரசீது கிடைக்கும். இதுநாள் வரை ''அண்ணாச்சி'' கடைகளில், வாங்கிய பொருட்களின் விலையை வாயில் சொல்வார்கள்; இல்லையென்றால், துண்டுச் சீட்டில் எழுதிக் கொடுப்பார்கள். இனி அந்த ''ரசீது'', கணினியில் கணக்குப் போடப்பட்டுக் கிடைக்கலாம்!

## வணிகர்கள் எதிர்ப்பது ஏன்?

மதிப்புக் கூட்டு வரி என்பது ஒரு வகையில் பலமுனை வரி போலவே இயங்கும் என்பதால், விற்பனையின் ஒவ்வொரு கட்டத்திலும் பொருளின் மீது வசூலிக்கப்படும் வரி அதன் முந்தைய கட்டத்தைவிட அதிகமாகவே இருக்கும். இதன் காரணமாக ஒரு 'பிரபலமான பொருளை சில்லறை வியாபாரிகளிடம் வாங்குவதைவிட, ''சூப்பர் மார்க்கெட்டிலோ'' அல்லது சங்கிலித் தொடர் கடைகளிலோ வாங்குவது விலை மலிவாக இருக்கும். பன்னாட்டு நிறுவனங்களோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ள ''சுபிக்ஷா'', ஃபுட் வேர்ல்டு போன்ற சங்கிலித் தொடர் கடைகள், சில்லறை வியாபாரிகளைவிட விலை குறைவாகப் பொருட்களை ஏற்கெனவே விற்று வரும் இவ்வேளையில், மதிப்புக் கூட்டு வரியினால் இந்தப் போட்டி இன்னும் கூர்மையடையும்.

சில்லறைக் கடைகளைப் புறக்கணித்து விட்டு, சங்கிலித் தொடர் கடைகளைத் தேடிப் போய், விலை குறைவாகப் பொருளை வாங்கினால் நுகர்வோருக்குத் தானே இலாபம் என்ற வாதம் புத்திசாலித்தனமானதுதான். ஆனால், சங்கிலித் தொடர் கடைகளில் எல்லோரும் நுழைய முடியுமா என்பதுதான் கேள்வி.

நகர்ப்புறத்து கூலித் தொழிலாளர்களும், கிராமப்புறத்து ஏழைகளும், நடுத்தர / மேட்டுக்குடி குடும்பங்களைப் போல, ஒரு மாசத்துக்குத் தேவையான மளிகை சாமான்களை ஒரே நாளில் வாங்கிக் குவித்துவிட முடியாது. ''ஒரு கிலோ அரிசி, 100 எண்ணெய், கழித்துக் கட்டப்பட்ட காய்கறியில் நூறு...'' என ஒரு நாளைக்குத் தேவையான சாமான்களை வாங்கிச் சாப்பிடும் நிலையில்தான் அவர்களின் வாழ்க்கை இருக்கிறது. ஒருநாள் கூலி கிடைக்காவிட்டால் கூட, வீட்டுக்கு அருகே இருக்கும் ''அண்ணாச்சி'' கடைக்குப் போய், கடனுக்கு சாமான் வாங்கும் உறவும் அவர்களுக்கு இடையே இருக்கிறது.


இந்தக் கூலித் தொழிலாளர்கள் சங்கிலித் தொடர் கடைகளுக்குள் நுழைந்து காசுக்கோ / கடனுக்கோ ''நூறு பருப்பு கட்டிக் கொடுப்பா'' எனக் கேட்டு வாங்க முடியுமா? சுபிக்ஷாவிலும், ஃபுட் வேர்ல்டிலும் கூடக் கடன் கொடுப்பார்கள். ஆனால், அது வேறுவிதமான கடன்; ''கிரெடிட்'' கார்டு கடன்.

சில்லறை வியாபாரிகளிடம் பொருட்களை வாங்கும் அடித்தட்டு மக்கள்தான் மதிப்புக் கூட்டு வரியின் பெரும் பங்கைச் சுமப்பார்கள். சில்லறை வணிகர்கள்கூட மதிப்புக் கூட்டு வரியை, தங்களின் கைக்காசிலிருந்து கட்டப் போவதில்லை என்பது உண்மைதான். ஆனால், அவர்களை இம்மதிப்புக் கூட்டு வரி வேறு வழிகளில் அச்சுறுத்துகிறது.

இந்த மதிப்புக் கூட்டு வரி அமலுக்கு வந்த பிறகு, வணிக வரி அதிகாரிகள் கடைகளைச் சோதனையிட வரும்பொழுது, கொள்முதலுக்கும், விற்பனைக்கும் இடையே வேறுபாடு இல்லாமல் இருக்க வேண்டும்; அதாவது, கொள்முதல் ரசீதில் இருந்து விற்பனையான பொருட்களின் ரசீதைக் கழித்துவிட்டுப் பார்த்தால், இருப்பு சரியாக இருக்க வேண்டும். இதில் முன்னுக்குப் பின் முரண்பாடு இருந்தால் அபராதம் விதிக்கப்படும். அபராதத் தொகையை முதலில் கட்டிவிட வேண்டும். அதன் பிறகுதான், இதை எதிர்த்து வழக்குப் போட முடியும்; வழக்குகளையும் உள்ளூரில் உள்ள சிவில் நீதிமன்றங்களில் போட முடியாது. மாறாக, வணிகவரித் துறையால் நியமிக்கப்படும் மேல் முறையீடு அதிகாரியிடமும், அதன் பின்னர் உயர்நீதி மன்றத்திலும்தான் வழக்குத் தொடர முடியும். கடையைப் போட்டுவிட்டு, வழக்கிற்காக சென்னைக்கும், ஊருக்கும் அலைவதைவிட, வழக்குப் போடுவதையே கைவிட்டு விடுவார் சிறு வியாபாரி.

மதிப்புக் கூட்டு வரியினால் கிடைக்கும் பலன்களை அனுபவிக்க வேண்டும் என்றாலோ, அல்லது அந்த வரி விதிப்பின் கீழ் விதிக்கப்படும் தண்டனையில் இருந்து தப்ப வேண்டும் என்றாலோ, இவ்வரியின் கீழ் வரும் சிறு / பெரிய வணிக நிறுவனங்கள் அனைத்தும் கைக்கு கை கொள்முதலையும், விற்பனையையும் கணக்கு வைத்துவிட வேண்டும். கொள்முதல் பேரேடு, விற்பனை பேரேடு, ஐந்தொகை கணக்கு, சிட்டா என நான்கு வகையான கணக்குகள் பராமரிக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால்,

**தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை நிர்வாகிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து சென்னையில் நடந்த உண்ணாவிரதப் போராட்டம்.**





படிப்பகம்

www.padippakam.com

அனைத்து வணிக நிறுவனங்களும் மதிப்புக் கூட்டு வரியைப் பராமரிக்க கணினிமயமாக வேண்டும். சில்லறை சிறு வியாபாரிகள் கல்லாபெட்டி மீது கணினியை வைத்துக் கொண்டு இப்படி கணக்கு வைக்க முடியுமா என்பதுதான் தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவை எழுப்பும் கேள்வி.

நமது நாட்டில் பெரும்பாலும் சில்லறை வியாபாரம் என்பது சுய தொழிலாகத்தான் நடக்கிறது. அதாவது, கடையின் முதலாளியும், கடையில் வேலை செய்யும் சிப்பந்தியும் பெரும்பாலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். கணவன் கொள்முதலுக்குப் போகும்பொழுது மனைவி கடையைப் பார்த்துக் கொள்கிறார்.

ஒரு மளிகைக் கடையை எடுத்துக் கொண்டால், அரிசி, பருப்பு, மிளகாய், சோப்பு என நூறுவிதமான பொருட்கள் இருக்கும். இவை அனைத்துக்கும் கொள்முதல் / விற்பனை பேரேடுகளைப் பராமரிப்பதும், சாமானைக் கட்டிக் கொடுத்த கையோடு, அதற்கு ரசீது போடுவதும் நடைமுறை சாத்தியமில்லாதது. எடுபிடி வேலைகளுக்குத் தனியாக ஒரு வேலையாள் போடுவதைக் கூடத் தவிர்த்து விட்டு, ஒரு நாளைக்கு 15, 16 மணி நேரம் தானே கடையில் நின்று வேலை செய்யும் ஒரு சிறு வியாபாரி, கணினியை இயக்கத் தெரிந்த ஒரு கணக்குப் பிள்ளையை வேலைக்கு வைத்துக் கொள்வார் என எதிர்பார்க்க முடியாது. வங்கிக் கடன் கிடைக்காமல், கந்துவட்டிக்குக் கடன் வாங்கி வியாபாரம் செய்யும் ஒரு சிறு வியாபாரி, செலவுகளைச் சுருக்கிக் கொள்வதில்தான் குறியாக இருப்பார்.

''இந்த நடைமுறைச் சிக்கல்களைப் பயன்படுத்திக் கொண்டு, வணிக வரி அதிகாரிகள், சிறு வியாபாரிகளுக்கு அடிக்கடி தொந்தரவு கொடுப்பார்கள். இதனால் இலஞ்சம்தான் பெருகும்'' என்கிறார் வணிகர் சங்கப் பேரவைத் தலைவர் வெள்ளையன். அதிகாரிகளின் தொல்லை அதிகமாகும் என்பதை மகாராஷ்டிரா மாநிலத்தில் சில பொருட்கள் மீது மதிப்புக் கூட்டு வரியைப் போட்ட அனுபவம் நிரூபித்திருக்கிறது. இதனால், அம்மாநில அரசு மதிப்புக் கூட்டு வரியை அமலாக்குவதை நிறுத்திவிட்டது.

''வால்-மார்ட்'' போன்ற பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் தங்களின் சங்கிலித் தொடர் கடைகளைத் திறக்க இன்னும் அனுமதிக்கப்படவில்லை. ஆனாலும்,



**''பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பரச் செலவுக்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டும்; அந்த விளம்பரங்களில் உண்மை இருக்கிறதா எனக் கண்டறிய வேண்டும்'' என்கிறார், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் த. வெள்ளையன்.**

பன்னாட்டு நிறுவனங்கள், சுபிக்ஷா, ஃபுட் வேர்ல்டு போன்ற உள்ளூர் சங்கிலித் தொடர் கடைகளுடன் உறவு வைத்துக் கொண்டு, அக்கடைகளுக்குக் குறைந்த விலையில் பொருட்களைக் கொடுப்பதன் மூலம், நாணயமற்ற போட்டியின் மூலம் உள்நாட்டு சில்லறை வியாபாரக் கடைகளுக்குக் குழிபறிப்பதாகக் குற்றஞ்சாட்டுகிறார், வெள்ளையன். உள்நாட்டில் தயாரிக்கப்படும் ''சுதேசி'' பொருட்களையும், தொழிலையும் பாதுகாக்க வேண்டும் என்றால், ''பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பரச் செலவுக்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டும்; அந்த விளம்பரங்களில் உண்மை இருக்கிறதா எனக் கண்டறிய வேண்டும்'' என்கிறார், அவர்.

**மதிப்புக் கூட்டு வரி – வரி ஏய்ப்பைத் தடுக்குமா?**

''மதிப்புக் கூட்டு வரி அமலுக்கு வந்தால் வரி ஏய்ப்பு பெருமளவு குறையும்; அதனால்தான் வணிகர்கள் இந்த வரியை எதிர்க்கிறார்கள்'' எனப் பொருளாதார நிபுணர்களும், அரசு அதிகாரிகளும் கூறுகிறார்கள். இது அரை உண்மைதான். ஏனென்றால், மதிப்புக் கூட்டு வரி சிறு வணிகர்களைப் பாதிக்கும் என்பதை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. மேலும், தொழிலதிபர்கள் - மொத்த வியாபாரிகள் - அரசு அதிகாரிகள் - அரசியல்வாதிகள் என்ற கூட்டணிதான் வரி ஏய்ப்பைத் திறம்பட நடத்தி வருகிறது. போலீசுக்கும் கள்ளச் சாராயப் பேர்வழிகளுக்கும் இடையே உள்ள உறவைப் போன்றதுதான், இவர்களுக்கு இடையேயுள்ள உறவு.

இந்த வரியை ஆதரிக்கும் தமிழ்நாடு சிறு மற்றும் குறுந்தொழில் அதிபர்கள் சங்கத்தினர், ''வரி ஏய்ப்பு என்பது, தொழிற்சாலை வாசலிலேயே, உற்பத்தியைக் குறைத்துக் காண்பிப்பதன் மூலம் தொடங்கிவிடுகிறது. இந்த வரி, தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறது'' என்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் 8,000 உள்ளன. ஆனால், தமிழக அரசின் கீழ் பதிவு செய்யப்பட்டவை 500 தான். மீதமுள்ள 7,500 நிறுவனங்களுக்கும் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனமே, பிளாஸ்டிக் மூலப் பொருட்களை கள்ளச் சந்தையில் விற்பதாகவும், வெளிச் சந்தையைப் போலவே, அதற்கு இணையாக கள்ளச் சந்தையிலும் மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி என ஒரு வலைப் பின்னல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த இரகசிய வலைப் பின்னலின் ஒரு கண்ணியைக் கூட மதிப்புக் கூட்டு வரியால் உடைத்து விட முடியாது.

1998-99-ஆம் ஆண்டில் 3,75,500 கோடி ரூபாய்க்கு நடந்த ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில், 2,30,500 கோடி ரூபாய் பெறுமான வருவாய், பல்வேறு விதமான மோசடிகளின் மூலம், நமது நாட்டிற்குக் கிடைக்காமல், அந்நிய நாடுகளுக்குக் கடத்தப்பட்டுள்ளது. இந்த வரிச் சீர்திருத்தம் இந்தக் கடத்தலைத் தடுக்கும் முயற்சியில் இறங்கவே இல்லை. மாறாக, சர்வதேச வர்த்தகப் போட்டியைச் சமாளிப்பது என்ற பெயரில், ஏற்றுமதி வர்த்தகத்தின் மீது மதிப்புக் கூட்டு வரி விதிக்கப்படுவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

போலீசைப் பயன்படுத்தி எப்படி ரவுடிகளை ஒழிக்க முடியாதோ, அது போலவே அதிகாரிகளைக் கொண்டு வரி ஏய்ப்பைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தாலும், சீர்திருத்தங்களைச் செய்தாலும் அதை மீறுவது எப்படி என்பதை அதிகாரிகளே சொல்லித் தருவார்கள்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி


படிப்பகம்

www.padippakam.com

மாநில அரசுகள் தங்களின் கஜானாவை நிரப்பிக் கொள்ள மக்களின் மீதுதான் வரிச் சுமையை ஏற்றி வைக்கின்றன; அதேசமயம், தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் வரிச் சலுகைகளை வாரி இறைக்கின்றன. உண்மையான வரிச் சீர்திருத்தம் என்பது மக்கள் மீது திணிக்கப்படும் வணிக வரி, கலால் வரி, சேவை வரி போன்ற மறைமுக வரிகளைக் குறைப்பதாகவும், முதலாளிகள், பணக்காரர்கள் மீது விதிக்கப்படும் சொத்து வரி, வருமான வரி, நிறுவன (கார்ப்பரெட்) வரி, பங்கு ஈவு வரி போன்ற நேர்முக வரிகளை அதிகரிப்பதாகவும் இருக்க வேண்டும்.

ஆனால், மதிப்புக் கூட்டு வரியோ, மக்கள் மீது ஏற்கெனவே ஏற்றி வைக்கப்பட்டுள்ள வணிக வரிச் சுமையைக் குறைப்பதாக இல்லை. மேலும், அனைத்துவிதமான விற்பனைக்கும் ரசீது போட வேண்டும், கணக்குக் காட்ட வேண்டும் என்ற போர்வையில் பதிவு பெறாமல் நடந்து வரும் சிறு வணிகத்தையும், குடிசைத் தொழில்களையும் ஒழித்துக் கட்ட முயலுகிறது. எனவே, இதனை வரிச் சீர்திருத்தமாக ஏற்க முடியாது. மாறாக, இந்த வரி என்பது சுதேசி தொழில்களையும், சுய வேலை வாய்ப்பையும் ஒழிப்பதற்கு அரசு ''இறக்குமதி'' செய்துள்ள புதிய ஆயுதமாகும்.

❑ பிரகாஷ்

## போலீசு:
# மக்களின் நண்பனா? ரவுடியின் தோழனா?

திருச்சி புறநகர் பகுதி காட்டூர் - பாப்பாக்குறிச்சி பஞ்சாயத்துத் தலைவராக இருக்கும் சுந்தரம், அ.தி.மு.க.வின் திடீர் பணக்கார அரசியல் புள்ளியாக வளர்ந்து வருகிறார். சாதாரண ஒப்பந்தத் தொழிலாளியாக பி.எச்.இ.எல்.-இல் வேலை பார்த்த இவர், தற்போது 20 இலட்சத்திற்கு சொகுசு பங்களா கட்டிக் கொள்ளுமளவிற்குத் தனது 'திறமை'யை வளர்த்துக் கொண்டுள்ளார். குடிநீர்க் குழாய் இணைப்புகளுக்குப் பஞ்சாயத்தால் தீர்மானிக்கப்பட்ட ரூ. 1500/-க்குப் பதிலாக ரூ. 8,000/- முதல் 13,000/- வரை 'விற்று' சாதனை புரிந்துள்ளார். இதன் மூலம் மக்களிடம் ''இலஞ்சம் சுந்தரம்'' என்ற பெயரைப் பெற்றவர்.

சுந்தரம் பொறுப்புக்கு வந்த ஆறாவது மாதமே, பஞ்சாயத்துக்கான GI குழாய்களைத் திருட்டுத்தனமாக விற்று ரூ. 25,000 சுருட்டினார். இதில் கையும் களவுமாகப் பிடிபட்ட இவர் மீது திருட்டு வழக்கும் பதிவு செய்யப்பட்டது. பத்திரிக்கைகளில் செய்தி வந்து நாறியது.

ஊரறிந்த இந்த இரகசியத்தை 27.03.2003 அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் போட்டு உடைத்து எச்சரிக்கையும் செய்தார், இதே பகுதியைச் சேர்ந்த பு.மா.இ.மு-வின் மாவட்டக் கிளைச் செயலர் தோழர் சிவா. மாற்றுக் கட்சி, எதிர்க்கட்சி எதுவுமே பேசத் துணியாத இவ்விசயத்தை அம்பலப்படுத்தியதால் ஆத்திரமடைந்த சுந்தரம், தருணம் பார்த்துக் காத்திருந்து, 17.04.2003 அன்று இரவு தாமதமாக வீடு திரும்பிய தோழரிடம் வம்பிழுத்து, தனது அடியாட்களுடன் சேர்ந்து தாக்கினார். துணைக்கு வந்த தோழரின் அண்ணன் மற்றும் மாமாவையும் குடிபோதையிலிருந்த இந்தக் கும்பல் கடுமையாகத் தாக்கி படுகாயமடையச் செய்தது.

இது குறித்து போலீசு நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்ட பின்னும், குற்றவாளிகளைக் கைது செய்யாமல் துணை நின்றது போலீசு துறை. எனவே குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி



சுவரொட்டி ஒட்டியதோடு நில்லாமல், குற்றவியல் சட்டம் 43 (d)-யின் படி குற்றவாளிகளைக் கைது செய்ய பொதுமக்களுக்கு அறைகூவல் விடுத்து துண்டறிக்கை மூலம் பு.மா.இ.மு. அறிவிப்புச் செய்தது.

குற்றவாளிகளில் ஒருவனான அ.தி.மு.க. நான்காவது வார்டு உறுப்பினர் ஆரோக்கியசாமி, பட்டப் பகலிலேயே மது அருந்திவிட்டு ரகளை செய்து கொண்டு ரோட்டில் திரிந்த போது, பொதுமக்களின் ஒத்துழைப்புடன் தோழர்கள் அவனைப் பிடித்துச் சென்று போலீசு நிலையத்தில் ஒப்படைத்தனர். தாங்கள் பாதுகாத்த குற்றவாளியைத் தோழர்களே கொண்டு வந்து போலீசு நிலையத்தில் ஒப்படைத்ததால் ஆத்திரமடைந்த ஆய்வாளர் ஜமீன் ''சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ள நீங்கள் யார்?'' என்று அத்தோழர்களையே குற்றவாளிகளாக்கி போலீசு நிலையத்தில் வைத்துவிட்டார்.

குற்றவாளிகளைக் கைது செய்யவும் சட்டத்தை அமுல்படுத்தவும் கு.வி.ச. 43 (d)-யின் படி பொதுமக்களுக்கு உள்ள உரிமையை எடுத்துக் கூறி தோழர்களை விடுவிக்கச் சென்ற ம.க.இ.க.வின் மாவட்டச் செயலர் தோழர் ராமதாசு மற்றும் பு.மா.இ.மு.வின் முன்னாள் மாவட்டச்செயலர் தோழர் சேகர் மற்றும் பொதுமக்கள் - தோழர்கள் என 26 பேரைக் கிரிமினல்களைப் போல துப்பாக்கி முனையில் சுற்றி வளைத்து கைது செய்தது போலீசு துறை. மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் மற்றும் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் அனைவரின் மீதும் கொலை முயற்சி வழக்குப் பதியப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஒரு தோழரைப் பார்க்க வந்த அவரின் தம்பியையும் கைது செய்த போலீசு, அவர் பல்கலைக் கழகத் தேர்வு எழுத முடியாதபடி பிணையில் விடவும் மறுத்துவருகிறது. அதேசமயம், தோழர்களால் பிடித்துத் தரப்பட்ட குற்றவாளியைக் கைது செய்யாமல் மருத்துவமனைக்கு அனுப்பி, அடுத்த நாளே வீட்டுக்கும் அனுப்பியது. முன் பிணைக்காக முயற்சித்து வரும் சுந்தரம் உள்ளிட்ட குற்றவாளிகளை ஒரு வாரம் கடந்த பின்னும் கைது செய்யாமல் ஊரே சிரிக்கும்படி தனது எடுபிடித்தனத்தைக் காட்டிக் கொண்டது. இதைக் கண்டித்து சுவரொட்டி இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

திடீர் பணக்கார அரசியல் ரவுடியான சுந்தரத்தையும் அவனது எடுபிடிகளையும் தொடர்ந்து அம்பலப்படுத்தி, பு.மா.இ.மு. பிரச்சார இயக்கம் நடத்தி வருகிறது. ''இது உங்களால் மட்டும்தான் முடியும்; தொடர்ந்து செய்யுங்கள்'' என்று நம்பிக்கையூட்டி நிதியும் அளித்து ஆதரவளிக்கும் பகுதிவாழ் மக்களின் துணையோடு அடுத்த கட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகிறது.

தகவல்: புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, திருச்சி.



படிப்பகம்

www.padippakam.com



# பயங்கரவாத மோடியின் அரண்மனைக் கொலை

இந்துவெறியர்கள் ஆளும் குஜராத் மாநிலத்தில், பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய பிரமுகரும் முன்னாள் உள்துறை அமைச்சருமான ஹரேன் பாண்ட்யா, கடந்த மார்ச் 26-ஆம் தேதியன்று சில மர்ம மனிதர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். உடனே மைய அரசின் உள்துறை அமைச்சரும், துணைப் பிரதமருமான அத்வானி, இது பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் வெறியாட்டம் என்று அலறினார். உடனடியாக, மையப் புலனாய்வுத் துறையின் (சி.பி.ஐ) விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு, ஐதராபாத்தைச் சேர்ந்த அஸ்கர் அலி மற்றும் இருவர் உள்ளிட்டு மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கம்போலவே, ''இவர்கள் பாகிஸ்தானில் இரகசிய ஆயுதப் பயிற்சி பெற்ற தீவிரவாதிகள்; பா.ஜ.க. - விசுவ இந்து ப்ரிசத் தலைவர்களைக் கொல்ல சதித்திட்டம் தீட்டினார்கள்; படாங்கியா என்ற முசுலீம் மதகுருவின் ஆலோசனைப்படி இவர் ஹரேன் பாண்ட்யாவைக் கொன்றுள்ளார்கள்; இவர்களுக்கும் இரகசிய உலகப் பேர்வழி தாவூத் இப்ராஹிமுக்கும் தொடர்பு உள்ளது'' என்று சிந்துபாத் கதைபோல முடிவேயில்லாமல் கட்டுக் கதைகளை அவிழ்த்துவிட்டு பா.ஜ.க. அரசு பீதியூட்டியது.

ஆனால் ஹரேன் பாண்ட்யாவின் கொலையானது, இந்துவெறி பாசிச பயங்கரவாதியும் குஜராத்தின் முதல்வருமான மோடி கும்பலின் திட்டமிட்ட அரசியல் படுகொலையேயாகும். பதவிக்காக பாரதிய ஜனதா கட்சியில் நடக்கும் போட்டாபோட்டியில் மோடி கும்பலால் அரங்கேற்றப்பட்ட படுகொலையே இது.

ஹரேன் பாண்ட்யா, இந்துவெறி பாசிச குருபீடமான ஆர்.எஸ்.எஸ்-இல் தொண்டராக செயல்பட்டு அரசியலுக்கு வந்தவர். கேசுபாய் பட்டேல் தலைமையிலான பா.ஜ.க. அரசில் அமைச்சராக இருந்தவர். பதவிச் சண்டையில் பட்டேலுக்குப் பதிலாக மோடியை முதல்வராக்கியது, பா.ஜ.க. தலைமை. மோடி, அப்போது சட்டமன்ற உறுப்பினராக இல்லாததால், ஏதாவது ஒரு தொகுதியில் நின்று வெற்றிபெற வேண்டிய சூழலில் இருந்த மோடி, ஹரேன் பாண்ட்யா தொடர்ந்து வெற்றி பெற்று வந்த எல்லீஸ் பிரிட்ஜ் தொகுதியை தனக்கு விட்டுக் கொடுக்க கோரினார். ஆனால் கேசுபாய்பட்டேல் குழுவைச் சேர்ந்த பாண்ட்யா, தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ய மறுத்துவிட்டார். பின்னர் மோடி கும்பலுடன் ஏற்பட்ட பதவிச் சண்டையால், அவர் அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

குஜராத்தில் நடந்த இந்துவெறி பயங்கரவாதப் படுகொலைகளைத் தொடர்ந்து நடந்த சட்டமன்றத் தேர்தலின்போது, எல்லா அதிகாரங்களையும் தன்னிடமே வரித்துக் கொண்ட மோடி கும்பல், ஹரேன் பாண்ட்யாவுக்கு தேர்தல் டிக்கெட் தர மறுத்தது. பாண்ட்யாவுக்கு வாய்ப்பளிக்குமாறு டெல்லி மேலிடம் வலியுறுத்திய போதிலும், மோடி அதை ஏற்க மறுத்து, சக்ரவர்த்திகளையே மிரட்டும் குறுநில மன்னனாக மாறினார். இந்து பாசிச பயங்கரவாதிகளின் ஆதரவு தனக்கு மட்டுமே உள்ளதாகக் காட்டிக் கொண்டு, மீண்டும் முதல்வரான மோடி, பா.ஜ.க.வில் தனக்கு போட்டியாக உள்ள குழுவினருக்கு அமைச்சரவையில் இடமளிக்காமல் ஒதுக்கினார். பாண்ட்யா முதலானோருக்கு அளிக்கப்பட்டு வந்த சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ரத்து செய்தார்.

இந்நிலையில், முந்தைய இந்துவெறி பயங்கரவாதிகளையே விஞ்சி ஆதிக்கம் செலுத்துமளவுக்கு மூர்க்கமாக வளர்ந்துவிட்ட மோடி கும்பலுக்கு மூக்கணாங்கயிறு போடவும், குஜராத்தில் குழுச் சண்டையால் கட்சி பிளவுபடாமல் தடுக்கவும் தமது பரம்பரை விசுவாசி பாண்ட்யாவை, டெல்லி மேலிடம் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினராக்கியது. இதற்கான முறைப்படி அறிவிப்பு வருமுன்னரே மோடி கும்பலால் அவர் தீர்த்துக் கட்டப்பட்டுள்ளார்.

பாண்ட்யா கொல்லப்பட்டதும் மருத்துவமனையில் அவரது சடலத்தைப் பார்க்க வந்த மோடியை பாண்ட்யாவின் தந்தையும் சகோதரியும் ''நீதாண்டா கொலைகாரன்'' என்று பகிரங்கமாகச் சாடியுள்ளனர். மருத்துவமனையில் பாண்ட்யாவின் ஆதரவாளர்கள் மோடிக்கு எதிராக முழக்கமிட்டுள்ளனர். இறுதி ஊர்வலத்தில், மோடி ஆதரவாளர்களை விரட்டியடித்துள்ளனர். மோடியும் அவரது பரிவாரங்களும் போலீசு காவலோடு தப்பித்து வந்துள்ளனர். பாண்ட்யாவின் தந்தையான வித்தல்பாய், இது திட்டமிட்ட அரசியல் படுகொலை என்றும் குஜராத்தில் இராவண ராஜ்ஜியம்தான் நடக்கிறது என்றும் அத்வானியிடமே வெளிப்படையாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனாலும், பதவிக்காகவும் அதிகாரத்துக்காகவும் இந்துவெறி பயங்கவாதிகளிடையே நடக்கும் உட்கட்சி குழுச் சண்டையை மூடிமறைத்து விட்டு, ''ஐயோ! பயங்கரவாதம்!'' என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறது, பா.ஜ.க. தலைமை. பழியை இசுலாமிய தீவிரவாதிகள் மீது போட்டு இந்துவெறியூட்டி ஆதாயமடையத் துடிக்கிறது.

அகமதாபாத்தில் மருத்துவமனை முன்பு கொலைகாரன் மோடிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் ஹரேன் பாண்டியாவின் ஆதரவாளர்கள் (உள்படம்) பாண்டியா.



உட்கட்சி குழுச் சண்டைகளைப் படுகொலைகள் மூலம் தீர்த்துக் கொள்ளும் பாரதிய ஜனதா கட்சி, ஒழுங்கும் கட்டுப்பாடுமிக்க கட்சியா? தமது பதவிக்கும் அதிகாரத்துக்கும் தமது சொந்தக் கட்சிப் பிரமுகர்களையே கொலை செய்யும் இந்துவெறியர்கள், இந்துக்களின் பாதுகாவலனாக இருக்க முடியுமா? அம்பலப்பட்டு நாறிய போதிலும், பாரதிய ஜனதாவுக்கு அரிதாரம் பூசிவரும் துக்ளக் சோ, குருமூர்த்தி வகையறாக்கள் தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

❑ பாலன்



படிப்பகம்

# லாரி உரிமையாளர் போராட்டம்: பாதி வழியில் நின்றது...

நாடு தழுவிய அளவில் தீவிரமடைந்த லாரி உரிமையாளர்கள் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது. 10 நாட்களுக்கு மேல் இப்போராட்டத்தைப் பந்தாடிய மத்திய அரசு தற்காலிகமாக பின்வாங்கியுள்ளது. லாரி உரிமையாளர்களின் 10 கோரிக்கைகளில் 9 கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதாக பத்திரிக்கைகள் தெரிவிக்கின்றன.

மத்திய தரைவழி போக்குவரத்து அமைச்சர் பி.சி. கந்தூரி, பெட்ரோலிய அமைச்சர் ராம்நாயக் மற்றும் அகில இந்திய வாகனப் போக்குவரத்து காங்கிரசின் தலைவர் பாபா சாகிப் துமால் ஆகியோர், போராட்டம் வாபஸ் பெறப்பட்டதாக நிருபர்களிடம் கூட்டாக தெரிவித்தனரே தவிர, அதிகாரப்பூர்வமான கூட்டறிக்கை ஏதும் வெளியிடவில்லை. போராட்டக் கமிட்டியின் ஏகமுடிவுடன் இது நடந்துள்ளதா என்ற சந்தேகம் நீடிக்கிறது. எப்படியிருந்தாலும் இதில் அரசு பெரும் வெற்றியும், போராட்டம் நடத்தியவர்கள் பெயரளவு வெற்றியும் அடைந்துள்ளனர்.

உடனடியாக ஒரு லிட்டர் டீசலுக்கு ஒரு ரூபாய் குறைப்பதை தவிர வேறு ஏதும் உருப்படியான அறிவிப்புகள் இல்லை. அரசு ஏற்றுக் கொண்டதாக சொல்லப்பட்ட 9 கோரிக்கைகளில் 8 கோரிக்கைகளின் தீர்வுகள் எதிர்காலத்திற்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசு தனியார்மயம், தாராளமயம், உலகமயக் கொள்கையின்படி உலகவங்கி மற்றும் உலக வர்த்தகக் கழக உத்திரவுப்படிதான் இயங்குகிறது. இதனடிப்படையில், 15 நாட்களுக்கு ஒருமுறை எண் ணெய் நிறுவனங்கள் பெட் ரோல், டீசல் விலையை மாற்றி அமைக்கின்றன. இந்த உண்மையை மத்திய அரசும் மறைக்கவில்லை.

''விலை மாற்ற தேதியைத் தள்ளி வைக்குமாறு எண்ணெய் நிறுவனங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.'' ''சர்வதேச சந்தை நிலவரத்துக்கு ஏற்ப டீசலின் விலையைக் குறைக்குமாறு கேட்டுக் கொள்கி றோம்'' என்று கூறியிருக்கிறது மத்திய அரசு. எனவே, லிட்டருக்கு ஒரு ரூபாய் குறைத்ததாவது உத்திரவாதமா? என்றால், இதை உலகவர்த்தகக் கழகத்திடம் தான் கேட்க வேண்டும். உள்ளூர் மந்திரியிடம் கேட்டு பயனில்லை.

அடிமடியில் ஒன்றும் இல்லை. ஆனால் ஆராவாரத்திற்கு மட்டும் பஞ்சமில்லை. ஏற்றுக் கொள்ளப்பட்ட 8 கோரிக்கைகளின் கதியும் இதுதான்.

✱ லாரி 'சேசிஸ்'களுக்கு விதிக்கப்பட்டுள்ள ரூ. 10 ஆயிரம் உற்பத்தி வரியை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்பது கோரிக்கை. இந்த கோரிக்கையை இப்போது நிதி அமைச்சகத்தின் முடிவுக்கு விட்டுவிடுவது என்கிறது தீர்மானம்.

✱ சரக்குக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பது கோரிக்கை, 'சரக்கு கட்டணம் நிர்ணயம் குறித்து மாநில அரசுகளுடன் பேசி முடிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்கிறது தீர்மானம்.

✱ லாரிகளுக்கு ''தேசிய உரிமம்'' வழங்குவதில் முறைகேடுகளை ஒழிக்க வேண்டும் என்பது கோரிக்கை, ''தேசிய உரிமம்'' வழங்குவதில் நடக்கும் முறைகேடுகளைக் களைய மத்திய அரசின் விதிமுறைகளைப் பின்பற்றுமாறு மாநில அரசுகளுக்கு கறாராக(!) ஆலோசனை வழங்கப்படும் என்கிறது தீர்மானம்.

✱ கனரக வாகனங்களுக்கு வயது வரம்பு 15 ஆண்டுகள் என்பதை ரத்து செய்ய வேண்டும் என்பது கோரிக்கை, இதற்கு ''புகை பரிசோதனை, சாலை பாதுகாப்பு விதிகளைக் கடை பிடித்தால் ஓட்டலாம்'' என்கிறது தீர்மானம்.

✱ லாரிகளுக்கு விதிக்கப்படும் சுங்கவரிகளை ரத்து செய்ய வேண்டும் என்பது கோரிக்கை, ''இதைப் பற்றி பரிசீலிக்க லாரி உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் 2 பேர் அடங்கிய 7 பேர் குழு ஒன்றை அமைப்பது'' என்கிறது தீர்மானம்.

ஆக, சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து விட்டது; ஆனாலும் நோயாளி இறந்துவிட்டார் என்கிற கதையாக போராட்டம் 'வெற்றிகரமாக' முடிந்து விட்டது; கோரிக்கை 'கோமா' நிலைக்குப் போய்விட்டது.

போராட்டத்தின் போது, நாளொன்றுக்கு லாரி உரிமையாளர்களின் வருமான இழப்பு ரூ. 1500 கோடி. தொழிற்துறை உற்பத்தி மற்றும் வர்த்தக இழப்பு நாளொன்றுக்கு ரூ. 20,000 கோடி. தமிழகத்தில் மட்டும் 4.2 லட்சம் சிறு, குறு தொழில் நிறுவனங்களில் 15 லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். 30 லட்சம் லாரி தொழிலாளர்கள் சாலையோரங்களில் குடிநீருக்கும் வழியில்லாமல் கொதிக்கும் வெயிலில் போராடினர். நாடு முழுவதும் திடீர் விலையேற்றத்தால் பரந்துபட்ட உழைக்கும் மக்கள் பாதிப்படைந்தனர். துறைமுக சரக்கு பணிகள் முடங்கின. நாடு முழுவதும் உள்நாட்டு வர்த்தகமும், வெளிநாட்டு ஏற்றுமதியும் ஏறக்

**ஊட்டி மண்டியில் தேங்கி கிடக்கும் காய்கறிகள், சரக்குகள்: போராட்ட சுமையில் விவசாயிகள், வியாபாரிகள்.**




குறைய செயலிழந்த நிலையில் இருந்தன. விவசாயிகள் விளைவித்த காய்கறிகளை விற்க முடியாமல் வருமானமின்றி தவித்தனர். இப்படி நாடே இவர்கள் போராட்டத்தைச் சுமந்து நின்றது. இம்மாபெரும் அடித்தளத்தின் மீது எழுந்துநின்ற லாரி உரிமையாளர்கள் போராட்டம் கடைசியில் தங்களின் சாதாரண சிறு கோரிக்கைகளைச் கூட அடைய முடியாமல் அடங்கிப் போனது.

போராட்டம் துவங்கியவுடனே மிரட்டலில் இறங்கியது மத்திய அரசு. அத்தியாவசியப் பணி பாதுகாப்பு சட்டம் ''எஸ்மா'' பாயும் என்று மிரட்டியது. போராட்டத் தலைவர்களை அதிகாரிகள் மட்டத்திலேயே அலட்சியப்படுத்தியது. போராட்டத்தை மக்களுக்கு எதிராக திருப்புவதில் முனைப்புக் காட்டியது. மத்திய தரைவழித்துறை அமைச்சர் பி.சி. கந்தூரி போராட்டக்காரர்களின் சந்திப்பைத் தவிர்க்க டில்லியை விட்டு சொந்தத் தொகுதிக்கு பயணம் செய்தார். பிரதமர் வாஜ்பாய் கோடைக்கால காசுமீர் அரசு விழாக்களில் கலந்து கொண்டார். அரசு, வெண்படை கருங்காலிகளைக் கொண்டு போராட்டத் தலைமையில் பிளவை ஏற் படுத்தும் முயற்சியில் இறங்கியது.

மத்திய அரசின் கொள்கைகளை எதிர்த்துப் போராட்டத்தைத் தொடங்கிய லாரி உரிமையாளர்கள் சங்க போராட்டத் தலைமைக்குக் கடைசியில் மத்திய மந்திரிகளைச் சந்தித்து பேசுவதே போராட்டமாகிப் போனது. மத்திய அரசின் எண்ணம் ஈடேறியது. போராட்டத் தலைமையில் இருவரை ''ஆலோசனைக் குழு'' பதவியால் அடித்து வீழ்த்தியது. அவர்கள் முன்னாள் மந்திரிகளுடன் கூட்டாக பத்திரிக்கை - தொலைக்காட்சிகளுக்குப் பேட்டி கொடுத்தனர்.

கடந்த 10 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்படும் புதிய பொருளாதாரக் கொள்கையின் பக்க விளைவுகளாக உருவான ஏராளமான நெருக்கடிகளில் ஒன்றுதான் லாரி உரிமையாளர்கள் போராட்டம். அதிநவீனமாக்குவது என்ற பெயரில் இந்தியா முழுவதும் உள்ள தரைவழி போக்குவரத்து, தேசிய நெடுஞ்சாலைகள், பாலங்களை அந்நிய நிறுவனங்களுக்கு தாரை வார்த்து கொடுத்தது மத்திய அரசு. சாலைகளை நவீனப்படுத்தி அதற்குண்டான செலவுபோல் பல மடங்கைச் சாலைகளைக் கடக்கும் வாகனங்களிடம் வசூலிப்பதுதான் ஏக போக நிறுவனங்களின் பணி.



லாரியிலேயே உணவைத் தயார் செய்து கொண்டு போராட்டத்தைத் தொடரும் லாரி தொழிலாளர்கள்.

ஏறக்குறைய ஒவ்வொரு லாரியும் ரூ. 2.28 லட்சங்களை அரசுக்கு வரியாகவும் போலீசுக்கு லஞ்சமாகவும் ஒவ்வொரு ஆண்டும் செலுத்துகிறது. சுண்டக்காய் கால் பணம், சுமக்கூலி முக்கால்பணம் என்பதை தாங்க முடியாத லாரி உரிமையாளர்கள் பலமுறை போராடி வலுவிழந்து போனார்கள். இப்போதும் அதுதான் நடந்துள்ளது.

உலகவங்கியின் உதவியால் சிங்கப்பூர் போல் இந்தியாவிலும் பளிங்கு சாலைகள் போட்டு அதில் நாம் சவாரி செய்யலாம் என்றார்கள். ஆனால், இப்போது நாம், பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய வளங்களைச் சுரண்டும் உல்லாச சவாரிக்கு கடன் சுமக்கும் பொதி கழுதைகளாய் ஆக்கப்பட்டோம். இதை உணராதவரை லாரி உரிமையாளர்களின் உதிரத்தை மத்திய அரசு உறிஞ்சுவதில் வியப்பேதும் இல்லை.

அந்நிய நிறுவனங்கள் இந்தியாவில் நுழைந்தால் சேவை துறைகளும் கட்டுமானச் சேவைகளும் பெரிதளவு பெருகும்; நாம் ஏராளமான வேலை வாய்ப்புகளைப் பெறலாம் என்றனர் ஆட்சியாளர்கள். ஆனால் அந்நியப் பொருட்களின் உற்பத்தி சந்தைக்காக உள்நாட்டு உற்பத்தி - இந்தியாவின் இதயம் சிதைக்கப்பட்டது. பணக்கார விவசாயிகளும் பட்டறை தொழில் அதிபர்களும் நட்டத்தால் தமது தொழில்களை துறந்துப் புதிதாக பிறந்த நவீன சேவைத் துறையில் பெருவாரியாக குவிந்தனர். லாரி அதிபர்கள், ஓட்டல் அதிபர்கள், ரியல் எஸ்டேட் அதிபர்கள் திடீரென பெருகினர். கண்ணை விற்று சித்திரம் வாங்கிய கதையானது. ஆனால், இது நாட்டு வளர்ச்சியாக சித்தரிக்கப்பட்டது. மக்களிடம் வாங்கும் சக்தி பெருகாமல் சேவைத் துறை வளராது என்ற பொருளாதார அரிச்சுவடியை மறைத்து, புதிய பொருளாதார - தாராளமய ராஜ்ஜியத்தில் குளிர் காய்ந்தனர், ஆட்சியாளர்கள்.

இப்போது, தனியார்மயம், தாராளமயம், உலகமய மறுகாலனிய கொள்கையால் இந்தியாவின் சேவைத் துறையையும் கைப்பற்றி உள்நாட்டு முதலாளிகளை விரட்டியடிக்கின்றன, அந்நிய நிறுவனங்கள். பிழைப்பதற்கு வழியில்லாமல் பெரும் நெருக்கடியில் இப்போது சிக்கி தவிக்கின்றனர் உள்நாட்டு முதலாளிகள். இது, இப்போது லாரி உரிமையாளர்களையும் நெருக்குகிறது; டீசல் விலையேற்றம், சுங்கவரி என்ற பல வடிவங்களில் தாக்குகிறது. எனவே, ஆட்சியாளர்களுக்கும் அரசுக்கும் காவடி தூக்கினால் பிழைத்துக் கொள்ளலாம் என்று லாரி உரிமையாளர்கள் நினைப்பது வீண் பிரமை. அரசு எந்திரத்தின் துணையுடன் தன்னை அண்டிப் பிழைக்கும் தொழிலாளர்களைக் கசக்கி, தங்களுடைய சேவையை நுகரும் பரந்துபட்ட அடிமட்ட மக்களைப் பிழிந்து பெரும் லாபம் ஈட்ட நினைப்பது கைவிரலால் கண்ணைக் குத்திக் கொள்வதற்கு ஒப்பாகும்.

எனவே, உள்நாட்டு முதலாளிகளில் ஒரு பிரிவினரான லாரி உரிமையாளர்கள், ஊரான் சுமையைத் தங்கள் மீது ஏற்றி தங்களை பெரும் நட்டப் புதை குழியில் தள்ளி விட்ட ஆளும் வர்க்கங்களான, பன்னாட்டு நிறுவனங்களையும் அவர்களுக்கு பல்லக்கு தூக்கும் உள்நாட்டு தரகு அதிகார வர்க்க முதலாளிகளையும், இவர்களை பாதுகாக்கும் மத்திய - மாநில பார்ப்பன பயங்கரவாத அரசுகளையும் தூக்கியெறியும் போராட்டத்தில் உடனடியாக களம் இறங்க வேண்டும்.

❑ தமிழ்மணி



படிப்பகம்

www.padippakam.com



## பயங்கரவாதி யார்?

இந்தியாவில் முசுலீம்கள், இரண்டாம்தர குடிமக்கள். அதிலும் காசுமீர் முசுலீம்கள் என்றால் அவர்களைத் தீவிரவாதிகள், பாக். கைக்கூலிகள் என்று முத்திரை குத்தி ஒடுக்கலாம்; ஏன், கேள்விமுறையின்றிச் சுட்டுக் கொல்லலாம் என்பதே இந்திய அரசின் அறிவிக்கப்படாத கொள்கையாக உள்ளது. காசுமீரத்து அப்பாவி முசுலீம்கள் மீது இந்திய அரச பயங்கரவாதிகள் நடத்திவரும் 'மோதல்' கொலைகளுக்கு அண்மைக்கால இரத்த சாட்சிதான், முகம்மது இக்பால்வானி.

முகம்மது இக்பால்வானி, காசுமீரின் புல்வாமா மாவட்டம் தெங்கிபோரா கிராமத்தைச் சேர்ந்த 30 வயதான இளைஞர். கணினி பட்டயப் படிப்பு முடித்த பொறியாளரான அவர், ''ரோஸ் கம்ப்யூட்டர்ஸ்'' என்ற கணினி பயிற்சி நிறுவனத்தை நடத்தி வந்தார். வளைகுடா நாடுகளில் வேலை தேடும் கனவோடு அவர் கடந்த 11-ஆம் தேதியன்று மும்பை சென்று முயற்சி செய்தார். வேலை கிடைக்க தாமதமாகும் என்பதை அறிந்து, தனது கணினி பயிற்சி நிறுவனத்துக்கு அவசியமான சில கணிப்பொறி சாதனங்களை வாங்கிக் கொண்டு காசுமீருக்குப் புறப்பட ஆயத்தமானார். மார்ச் 24-ஆம் தேதியன்று தனது உறவினர்களுடன் தொலைபேசி வழியே உரையாடிய அவர், வேலைகளை முடித்துக் கொண்டு இரு நாட்களில் வந்து விடுவதாகக் கூறினார். ஆனால் மார்ச் 29-ஆம் நாளன்று அவர் மும்பை போலீசாரால் கோரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.



சுட்டுக் கொல்லப்பட்ட முகம்மது இக்பால் சடலத்தின் அருகே கதறும் காசுமீர் மக்கள்; இந்திய அரசு பயங்கரவாதத்தின் இரத்த சாட்சி.

''முகம்மது இக்பாலுடன் மேலும் இருவர் கூட்டுச் சேர்ந்து, மும்பையில் தங்கியிருந்து அத்வானி, பால்தாக்கரே, தொகாடியா ஆகிய முக்கியத் தலைவர்களைக் கொல்லச் சதித் திட்டம் தீட்டினர். இவர்கள் லஸ்கர் இ தொய்பா என்ற பாக். கைக்கூலி அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள். சோதனைச் சாவடியில் இவர்கள் தமது வாகனத்தை நிறுத்தாமல் வேகமாகச் சென்றபோது தடுக்க முயற்சித்த போலீசார் மீது இவர்கள் துப்பாக்கியால் சுட்டனர். போலீசார் திருப்பிச் சுட்டபோது ஏற்பட்ட மோதலில் இவர்கள் கொல்லப்பட்டனர்'' என்று மும்பை போலீசு கூசாமல் புளுகுகிறது.

ஆனால் இந்த அண்டப்புளுகுக்கு ஆப்பறையும் வகையில், ''முகம்மது இக்பால் மீது இதுவரை எந்த குற்றச்சாட்டோ, வழக்கோ இல்லை; அவர் தீவிரவாதி என்றோ, தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர் என்றோ குற்றம் சாட்டப்படவுமில்லை. அவர் ஒரு கணினி பொறியாளர்'' என்கிறார் புல்வாமா மாவட்ட முதுநிலை போலீசு கண்காணிப்பாளரான விபுல்குமார். அப்படியானால், அப்பாவி முகம்மது இக்பாலை மும்பை போலீசார் ஏன் சுட்டுக் கொல்ல வேண்டும்?

கடந்த மார்ச் 23-ஆம் தேதியன்று காசுமீரின் நாதிமார்க் கிராமத்தில் காசுமீர பண்டிதர் (பார்ப்பனர்) குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்று வெறியாட்டம் போட்டுள்ளனர். இக்காட்டுமிராண்டித்தனமான கொடுஞ்செயலை காசுமீர் முசுலீம்கள் கண்டித்து மாநிலம் முழுவதும் கடையடைப்பு நடத்தியதோடு, நாதிமார்க் கிராம முசுலீம்கள் பெருமளவில் திரண்டு மயானத்தில் அஞ்சலி செலுத்தியுள்ளனர். ஆனாலும் நாதிமார்க் கொலைகளை தீவிரவாதிகளின் வெறிச்செயலாகப் பார்க்காமல், இந்துக்களுக்கு எதிராக முசுலீம்கள் நடத்திய கொலைவெறித் தாக்குதலாகக் கருதிக் கொண்டு, அதற்குப் பழிக்குப் பழிவாங்கும் வெறியோடு தான் மும்பை போலீசு பயங்கரவாதிகள், முகம்மது இக்பாலைக் கொன்றொழித்துள்ளனர். காசுமீரில் இந்துக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதற்குப் பதிலடியாக காசுமீர் முசுலீம்களைக் கொன்றொழிப்போம் என்று இந்திய பயங்கரவாதிகள் விடுத்துள்ள எச்சரிக்கைதான் இது!

ஆனால், காசுமீர் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை திசைதிருப்பி, இந்து - முசுலீம் கலவரமாக மாற்றிவிடத் துடிக்கும் இந்திய அரச பயங்கரவாதிகள் மற்றும் பாக். கைக்கூலி தீவிரவாதிகளின் சதிகள் ஒருபோதும் வெற்றிபெற முடியாது. முகம்மது இக்பாலின் கோரக் கொலைக்கு எதிராக, தெங்கிபோரா கிராமத்து இந்துக்களும் முசுலீம்களும் ஒன்றுபட்டு, இந்திய எதிர்ப்பு முழக்கங்களுடன் நடத்திய கண்டன ஊர்வலமே இதற்குச் சான்று கூறப் போதுமானது. 'மோதல்' என்ற பெயரில் அப்பாவிகளைக் கொன்றொழித்துவரும் இந்திய அரச பயங்கரவாதிகளின் வெறியாட்டம் காசுமீர் மக்களிடம் அம்பலப்பட்டுப் போயுள்ளதாலும், பொதுமக்கள் நிர்ப்பந்தத்தாலும், காசுமீர் மாநில அரசு வேறுவழியின்றி முகம்மது இக்பால் கொலை பற்றி மும்பை போலீசார் மீது விசாரணை நடத்த உத்திரவிட்டுள்ளது.

## விவசாய அமைச்சரா? சோளக்கொல்லை பொம்மையா?

1947-க்குப் பிறகு இதுவரை கண்டிராத அளவுக்கு நாடு



படிப்பகம்

www.padippakam.com



முழுவதும் கடும் வறட்சி நிலவும் இன்றைய சூழ்நிலையில், கூலி - ஏழை விவசாயிகள் வேலையின்றித் தத்தளிக்கும் சூழ்நிலையில் மைய அரசு, வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ரூ. 3000 கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர்க்கடனை ரத்து செய்வது பற்றி ஏறத்தாழ 3 மணிநேரம் விவாதித்த மைய அரசின் அமைச்சர்கள், இதனால் கடுமையான நிதிப் பற்றாக் குறை ஏற்படும் என்று பிரதமரின் முடிவுக்கு விட்டனர். அவரோ பயிர்க்கடனை ரத்து செய்வதற்கு மாறாக, கடனில் 20% மட்டுமே தள்ளுபடி செய்வதாக அறிவித்தார்.

கோதுமை கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி விவசாயிகள் பலமுறை போராடிய பிறகு, ஒரு குவிண்டாலுக்கு ரூ.15 மட்டும் அதிகரிப்பது பற்றி மைய அமைச்சரவை ஏறத்தாழ 2 மணிநேரம் விவாதித்தது. கடைசியில் ரூ. 10 மட்டுமே உயர்த்தப்பட்டது. இதனால் ரூ. 200 கோடி அளவுக்கு நிதிச் சுமை ஏற்படும் என்று அமைச்சர்களும் பொருளாதார ஆலோசகர்களும் புலம்பினர்.

அதேநேரத்தில், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பஞ்சப்படி உயர்வை அமைச்சரவை உடனடியாக ஏற்றுக் கொண்டது. இப்பஞ்சப்படி வழங்கலின் விளைவாக அரசுக்கு ரூ. 1800 கோடி அளவுக்கு நிதிச்சுமை ஏற்படும். வறட்சியால் தத்தளிக்கும் விவசாயிகளுக்கு நிவாரண உதவி செய்ய ஆயிரம் ஆலோசனை செய்யும் அரசு, அரசு ஊழியர்களின் கோரிக்கையை மறுபேச்சின்றி ஏற்றுக் கொண்டது. இதுமட்டுமல்ல, யூனிட் டிரஸ்ட் என்னும் அரசு காப்பீடு நிறுவனம் திவாலாகும் நிலை ஏற்பட்ட போது, அதில் முதலீடு செய்த முதலாளிகள் மற்றும் நடுத்தர வர்க்க - மேட்டுக் குடியினர் பாதிக்கப்படாமலிருக்க மைய அரசு உடனடியாக ரூ. 13,500 கோடியை ஒதுக்கியது. ஊக வணிகர்கள், தரகர்கள், மேட்டுக்குடியினரின் நலன் பற்றியே அரசு அக்கறை காட்டியதே தவிர, வறட்சி - பட்டினியால் பரிதவிக்கும் கோடானு கோடி விவசாயிகளின் நலனில் எள்முனையளவும் அக்கறை காட்டவில்லை.

அரசு வங்கிகள் விவசாயத்துக்கு 18% அளவுக்கு முன்பணம் கொடுக்க வேண்டும் என்று விதிமுறைகள் இருந்தபோதிலும், எந்த வங்கியும் இந்த அளவுக்கு விவசாயிகளுக்குக் கடன் கொடுத்ததே இல்லை. 1990-ஆம் ஆண்டில், விவசாயிகள் வங்கிகளில் வாங்கியுள்ள ரூ. 10,000-க்கும் குறைவான கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றி மைய அரசு பரிசீலித்த போது, இதனால் ரூ. 15,000 கோடி அளவுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும் என்று பொருளாதாரவாதிகள் கூச்சலிட்டனர். பொருளாதாரம் நாயிடம் சிக்கிக் கொண்டதாகிவிடும் என்று எச்சரித்தனர். ஆனால் இன்று, ஏறத்தாழ ரூ. ஒரு லட்சம் கோடி அளவுக்கு வங்கிகளில் கடன் வாங்கி பெருமுதலாளிகள் ஏப்பம் விட்டுள்ளனர் என்று நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நிதியமைச்சர் வெளிப்படையாகவே அறிவித்துள்ளார். விவசாயிகளது கடன்களை ரத்து செய்தால், பொருளாதாரமே நாசமாகி விடும் என்று கூச்சலிட்டவர்கள் இன்று இதுபற்றி வாயே திறப்பதில்லை.

நகர்ப்புற மேட்டுக்குடியினர் கார் வாங்குவதற்காக வங்கிகளில் பெறும் கடனுக்கு 8.25% தான் வட்டி. ஆனால் கிராமப்புற விவசாயிகள் டிராக்டர் வாங்குவதற்காகப் பெறும் கடனுக்கு 14% வட்டி வசூலிக்கப்படுகிறது. இக்கடனைப் பெற விவசாயிகள் நிலத்தை அடமானம் வைத்து வில்லங்கச் சான்றிதழும் கொடுக்க வேண்டியுள்ளது. இப்படி பல வழிகளிலும் விவசாயிகள் வஞ்சிக்கப்பட்டு புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்களது உழைப்பால் உருவான செல்வத்தை பெருமுதலாளிகளும் நகர்ப்புற மேட்டுக்குடியினரும் அரசு அதிகாரிகளும் தின்று கொழுக்கிறார்கள்.


— இந்த உண்மைகளைப் போட்டு உடைத்திருப்பவர் வேறு யாருமல்ல; மைய அரசின் விவசாய அமைச்சர் அஜித் சிங்தான்! இத்தனை நாளும் இப்படி ஒரு அமைச்சர் இருப்பதே தெரியாத அளவுக்கு முடங்கிக் கிடந்த அஜித்சிங், அடுத்த பொதுத் தேர்தல் நெருங்குவதால் தனது "ஜாட்" சாதி விவசாயிகளிடம் ஆதரவு திரட்டும் நோக்கத்தோடு இப்படி முதலைக் கண்ணீர் வடித்துள்ளார். தனது தந்தையும் முன்னாள் பிரதமருமான சரண்சிங்கின் நூறாவது பிறந்தநாள் விழாவில் அவர், விவசாயிகள் மீது திடீர்க் கரிசனம் வந்து இப்படிப் புலம்பியுள்ளார். விவசாயிகளுக்கு மட்டுமல்ல, மைய அரசுக்கும் விவசாய அமைச்சர் அஜித்சிங் ஒரு சோளக் கொல்லை பொம்மைதான்!

## டாலர் நீரோட்டத்தில் இந்துவெறி பேயாட்டம்

இசுலாமியர்கள், கிறித்துவர்களுக்கு எதிராக இந்துவெறியர்கள் நடத்திவரும் இனப்படுகொலைகளுக்குப் பின்னே வெளிநாட்டுப் பணம் இருக்கின்றது. இந்தப் பணத்தின் பெரும்பகுதி அமெரிக்காவிலிருந்து வருகிறது.

அமெரிக்காவிலுள்ள மேரிலேண்டை மையமாகக் கொண்டு, அமெரிக்காவில் குடியேறியுள்ள இந்தியரான வினோத் பிரகாஷ் என்பவர், இந்திய வளர்ச்சி மற்றும் நிவாரண நிதி (IDRF) என்ற அறக்கட்டளை நிறுவனத்தை நடத்தி வருகிறார். இவர் உலக வங்கியின் முன்னாள் ஊழியர். அதோடு இந்துவெறி ஆர்.எஸ்.எஸ்.-இன் தொண்டருமாவார்.

இந்த நிறுவனம், அமெரிக்காவில் வாழும் இந்தியர்களிடம் தாய்நாட்டு முன்னேற்றத்துக்கு நன்கொடை தருமாறு கோடிகோடியாய் வசூலித்துள்ளது. இந்தியாவில் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் புறக்கணிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சாதி, மத, இன, பிராந்திய வேறுபாடின்றி உதவுவதாகக் கூறிக் கொண்டு இந்நிறுவனம் நிதி திரட்டியுள்ளது. இந்த நிதியில் பெரும்பகுதி இந்துவெறி பாசிஸ்டுகளுக்கு மறைமுகமான வழிகளில் அனுப்பப்பட்டுள்ளது. 1994 முதல் 2000 வரை ஏறத்தாழ 16 கோடி ரூபாய் அளவுக்கு இந்து வெறியர்கள் அமெரிக்காவிலிருந்து பெற்றுள்ளனர். குஜராத்தில் கிறித்துவ பழங்குடியினரை அச்சுறுத்தி இந்து






படிப்பகம்

www.padippakam.com



மதத்திற்கு மாற்றவும், கிறித்துவ நிறுவனங்கள் - பாதிரியார்கள் - மாதாகோயில்கள் மீது தாக்குதல் நடத்தவும் இந்த நிதி செலவிடப்பட்டுள்ளது.


சேவா பாரதி மத்திய ஷேத்ரா என்ற அமைப்பானது, ஆர்.எஸ்.எஸ்.-இன் கிளை அமைப்புகளுள் ஒன்றாகும். இந்த அமைப்புக்கு அமெரிக்காவிலுள்ள அறக்கட்டளையிலிருந்து கடந்த நான்காண்டுகளில் 2,50,000 டாலர்கள் நிதியுதவி அனுப்பப்பட்டுள்ளது. ஐதராபாத்தில் இயங்கி வரும் கேசவ சேவா சமிதி என்ற அமைப்பு கடந்த ஐந்தாண்டுகளில் 40 000 டாலர்கள் பெற்றுள்ளது. ஆர்.எஸ்.எஸ்.-இன் ஆந்திரக் கிளை தலையகமும் இதே முகவரியில்தான் உள்ளது. இதேபோல் விசுவ இந்து பரிசத்தின் துணை அமைப்பான பாரத் கல்யாண் பிரதிக்ஷான் என்ற அமைப்பும் அமெரிக்க அறக்கட்டளையிடமிருந்து பல்லாயிரம் டாலர்களைப் பெற்றுள்ளது. பழங்குடியினரை இந்துக்களாக மதம் மாற்றுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள ''வனவாசி கல்யாண் ஆஸ்ரம்'' என்ற அமைப்பும், பாரத் விகாஸ் பரிசத், சமஸ்கிருத பாரதி முதலான இந்துவெறியர்களின் பினாமி அமைப்புகளும் நிதியுதவி பெற்றுள்ளன. வெவ்வேறு அமைப்புகளின் பெயராலும், ஹவாலா வழிகளின் மூலமும் கோடிகோடியாக இந்துவெறியர்கள் நிதியைப் பெற்றுள்ளனர். இதில் பெரும்பகுதி விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள் முதலான இந்துவெறி பயங்கரவாத அமைப்புகளுக்கும் போயுள்ளது. குஜராத்தில் பழங்குடியினரை அச்சுறுத்தியும் ஆசை காட்டியும் இந்து மதத்திற்கு மாற்றவும் அவர்களை முசுலீம்களுக்கு எதிராகத் திருப்பி விடவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்துவெறியர்களின் மோசடிகள் மெதுவாக அம்பலமாகத் தொடங்கியதும், தாங்கள் அளிக்கும் நன்கொடையானது இந்தியாவில் மதவெறிப் படுகொலைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதை அறிந்து அமெரிக்காவிலுள்ள பலர், இந்த நிதிதிரட்டலுக்கு எதிராக இணைய தளத்தில் பிரச்சாரம் செய்து வருகின்றனர். ''வெறுப்பை வளர்ப்பதற்கு நிதி தருவதை நிறுத்துக!'' என்று அதற்குப் பெயரிட்டுள்ளனர். தற்போது அமெரிக்க அரசுத் துறையும் நிதித்துறையும் அறக்கட்டளை பெயரில் திரட்டப்பட்ட நிதியானது, இந்தியாவில் அடிப்படைவாதத்தையும் பயங்கரவாதத்தையும் வளர்க்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்று விசாரணை செய்து வருகிறது. இதுபோலவே பிரிட்டனிலும் ஆர்.எஸ்.எஸ்.-இன் அனைத்துலக அமைப்பான ''இந்து சுயம் சேவக் சங்'' என்ற அறக்கட்டளை நிறுவனத்திலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட நிதி பற்றி விசாரணை நடந்து வருகிறது.

இந்தியாவில், மத இயக்கங்கள் வெளிநாடுகளிலிருந்து நேரடியாக நிதியுதவி பெற முடியாதபடி சட்ட நெருக்கடி உள்ளதால், இப்படி அறக்கட்டளை மூலம் மோசடி செய்து வந்த இந்துவெறியர்கள், தமது சதிகள் அம்பலப்பட்டுப் போனதால் தேள் கொட்டிய திருடனாக விழிக்கின்றனர். ஆர்.எஸ்.எஸ்-உம் அதன் துணை அமைப்புகளும் தேசப்பற்றுமிக்க நேர்மையான சமூக சேவை அமைப்புகள் என்று நற்சான்றிதழ் அளித்துவரும் துக்ளக் சோ முதலான பார்ப்பனக் கூட்டமோ, இத்தனைக்கும் பிறகும் ஊமைக் கோட்டான்களாக நிற்கிறது.

## வெறிபிடித்த ஆயுதக் குவிப்பு

ஏழை நாடுகளிலேயே மிக அதிக அளவுக்கு ஆயுதங்



களை வாங்கிக் குவிக்கும் நாடு இந்தியாதான். 1998 முதல் 2001 வரை இந்தியா 72,000 லட்சம் டாலர் அளவுக்கு (ஏறத்தாழ ரூ. 35,000 கோடி) ஆயுதங்களை வாங்கியுள்ளது. பணக்கார நாடான ஐக்கிய அரபுக் குடியரசுக்கு அடுத்து பெருமளவில் ஆயுதங்களை வாங்கிக் குவித்துள்ள நாடு இந்தியாதான்!

கடந்த பிப்ரவரியில் பெங்களூரில் நடந்த ''ஏரோ இந்தியா - 2003'' கண்காட்சியில் 22 நாடுகளிலிருந்து 180 ஆயுதத் தளவாட - போர்க் கருவி நிறுவனங்கள் பங்கேற்றன. இவை இந்திய அரசுக்கு ஆயுதங்களை விற்க பேரங்கள், இரகசிய கையூட்டு - போட்டாபோட்டிகளில் ஈடுபட்டன. இதைத் தொடர்ந்து, அமெரிக்க நிறுவனங்கள் ரூ. 700 கோடி அளவுக்கு போர்க் கருவிகள், ராடார் சாதனங்கள், போர் விமானங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்ய உள்ளன. மிக் 29 கே. ஜெட் விமானங்கள், காமோவ் ஹெலிகாப்டர்கள், டியு 22 எனும் நீண்டதூர குண்டு வீச்சு டாங்கிகள், அகுலா நீர்மூழ்கிக் கப்பல்கள் முதலானவற்றை ரூ. 300 கோடிக்கு அளிக்க ரஷ்யா முன்வந்துள்ளது. இது தவிர செக் - அமெரிக்க எல் 159 பி எனப்படும் சக்திவாய்ந்த ஜெட் போர் விமானங்கள், பிரிட்டனின் ஹாக் போர் விமானங்கள், பிரான்சின் ''ஸ்கோர்பின்'' நீர்மூழ்கிக் கப்பல்கள், மிராஜ் போர்விமானங்கள், இசுரேலின் ''செர்ச்சர்'' எனும் தொலைக்கட்டுப்பாட்டு தானியங்கி போர் விமானங்கள், ''போல்கன்'' ராடார் சாதனங்கள் முதலானவற்றையும் வாங்கிக் குவிக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி நடப்பாண்டில் ஏறத்தாழ ரூ. 2000 கோடி அளவுக்கும் அடுத்த பத்தாண்டுகளில் 15,000 கோடி ரூபாய்க்கும் ஆயுதங்களை வாங்கிக் குவிக்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

தெற்காசியாவில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் விசுவாச அடியாளாக - பிராந்திய மேலாதிக்க வல்லரசாகத் தன்னை நிலைநாட்டிக் கொள்ளும் நோக்கத்தோடு இந்திய ஆட்சியாளர்கள் வெறிபிடித்த ஆயுதக் குவிப்பில் இறங்கியுள்ளனர். இதன்மூலம் இந்திய அரசு, அண்டை நாடுகளை அச்சுறுத்தி மேலாதிக்கம் செய்வதோடு, அந்நாடுகளின் புரட்சிகர - ஜனநாயக இயக்கங்களையும் ஒடுக்கும். உள்நாட்டில் மக்கள் போராட்டங்களை மிருகத்தனமாக அடக்கும். தெற்காசியாவின் அரச பயங்கரவாத பிற்போக்குக் கோட்டையாக இந்தியா விரைவில் முன்னேறும். இந்தியாவில் அடுத்த வேளை சோற்றுக்கு வழியின்றி மக்கள் பரிதவிக்கும்போது, 'வல்லரசு' என்ற பெருமை மட்டும் இந்தியாவுக்குக் கிடைக்கும்!



படிப்பகம்

www.padippakam.com



## மருத்துவமனை இடிப்பு: இந்துவெறியர்களின் 'கரசேவை'

குஜராத்தில் இனப்படுகொலைகளை நடத்தி தேர்தல் வெற்றியைச் சாதித்ததும், ''குஜராத்திலுள்ள முசுலீம்கள் இரத்தப் பரிசோதனை செய்து கொண்டு, மரபின ரீதியாக தாங்கள் அரேபிய இனத்தைச் சேர்ந்தவர்களல்ல என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும்'' என்று கொக்கரிக்கிறார், இந்துவெறி பாசிசத் தளபதி தொகாடியா. குஜராத் இந்து வெறி சாம்ராஜ்ஜியத்தில் அடுத்த இனப்படுகொலைக்கு ஆயத்தமாக கிறித்தவர்கள் பற்றிய கணக்கெடுப்புகள் நடந்து வருகின்றன. இன்னொருபுறம் அரசு சட்டம் - நீதியைக் குப்பையில் வீசிவிட்டு, இந்துவெறி குண்டர்கள் தமது பகுதிகளில் தமது சொந்த பாசிச சட்டம் - நீதியைச் செயல்படுத்தக் கிளம்பி விட்டனர். அவற்றை ஏற்க மறுத்தால் என்ன விளைவு ஏற்படும் என்பதை ஆசாத்சௌக் அருகிலுள்ள லிம்டி நகராட்சியில் நிரூபித்துக் காட்டி விட்டனர்.

குஜராத்தில் ஈராண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட நிலநடுக்கத்தின்போது லிம்டி நகரில் இருந்த அரசு மருத்துவமனை இடிந்து விட்டது. அதைச் சீரமைக்கவும் புதிய கட்டிடங்கள் எழுப்பவும் அனைத்திந்திய கிறித்துவ கவுன்சில் நன்கொடை திரட்டிக் கொடுத்தது. இந்நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட இம்மருத்துவமனையை கடந்த ஏப்ரல் 11-ஆம் தேதியன்று அமைச்சர் கிர்திசிங் திறந்து வைக்க விழாவும் ஏற்பாடாகியது. இவ்விழாவில் நன்கொடை அளித்த கிறித்தவ கவுன்சிலின் சார்பில் சில பாதிரியார்களும் பங்கேற்கும் வகையில் அழைப்பிதழ்களும் சுவரொட்டிகளும் தயாராயின. லிம்டி நகராட்சி மன்றத் தலைவர் தலைமையில் மருத்துவர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் வாழ்த்துரை வழங்கவும் ஏற்பாடாகியது.

ஆனால், திறப்புவிழாவுக்கு முதல் நாளன்று நள்ளிரவில் விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள் குண்டர்கள் இப்புதிய மருத்துவமனையை இடித்து நாசமாக்கி விட்டனர். அன்றிரவில், ''அன்னிய கைக்கூலிகளான கிறித்தவர்கள் அளித்த நன்கொடையில் கட்டப்பட்ட மருத்துவமனையில் இந்துக்கள் சிகிச்சை பெறுவது அவமானம்! இந்துநலன் பற்றி பேசுபவர்கள்தான் இந்துக்களுக்கு உதவ வேண்டும்; அவர்கள்தான் இந்த நாட்டை ஆளவேண்டும். இந்து இளைஞர்களே, கிறித்துவர்களுடன் கூடிக்குலாவும் நகராட்சிக்குப் பாடம் புகட்டுங்கள்! ஜெய் சிறீராம்!'' என்ற முழக்கங்களுடன் திடீர் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. மறுநாள் காலை, விழாவுக்கு முன்பாக இந்துவெறி குண்டர்கள் மருத்துவமனை திறப்புவிழாவை எதிர்த்து கண்டனப் பேரணியை நடத்தினர். இதனால் கலவரம் ஏற்படுமோ என்று அஞ்சி, நகராட்சி அதிகாரிகள் இவ்விழாவை ரத்து செய்தனர். அதற்கு முன்னதாகவே, விழாவை ரத்து செய்யாவிட்டால், நகராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்களை ''இந்து விரோதிகள்'' என்று குற்றம் சாட்டி சுவரொட்டி ஒட்டப்படும் என்று இந்துவெறி குண்டர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



போலீசாரோ, மருத்துவமனையை சில சமூக விரோதிகள் இடித்ததாகவும், இந்துத்துவ அமைப்புகள் இதில் ஈடுபட்டுள்ளதாக தமக்கு புகார் எதுவும் வரவில்லை என்றும், எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இயலாதென்றும் கையை விரிக்கின்றனர். ஆனால் கிறித்துவ அமைப்பினர் புகார் கொடுத்துள்ள போதிலும் இதுவரை இந்துவெறி குண்டர்கள் கைது செய்யப்படவில்லை. சீரமைக்கப்பட்ட மருத்துவமனையோ மீண்டும் இடிபாடுகளுடன் இந்துவெறி அட்டூழியத்தின் சாட்சியமாக நிற்கிறது. குஜராத்தின் லும்டி நகரை ஆளுவது நகராட்சி நிர்வாகிகளல்ல; இந்துவெறி பாசிச குண்டர்கள்தான் என்பதை நிரூபித்துக்காட்ட இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

## ஜனநாயகக் கோமான்களா? சட்டபூர்வக் குற்றவாளிகளா?

அது ஒரு முக்கியமான அமைப்பு. அந்த அமைப்பைச் சேர்ந்த 29 பேர் தமது மனைவியைக் கொடுமைப்படுத்தியவர்கள். 7 பேர் மோசடி குற்றத்துக்காக கைது செய்யப்பட்டவர்கள். 19 பேர் கள்ளக் காசோலை எழுதியதற்காகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள். 117 பேர் நேரடியாகவோ மறைமுகமாகவோ குறைந்தபட்சம் 2 தொழில் நிறுவனங்களைத் திவாலாக்கிய பொருளாதாரச் சதிகளில் ஈடுபட்டவர்கள். 3 பேர் பொது இடத்தில் தாக்குதலில் ஈடுபட்டதற்காகச் சிறையிடப்பட்டவர்கள். 71 பேர் மோசமான பற்று-வரவு காரணமாக வங்கிக் கடன் அட்டை மறுக்கப்பட்டவர்கள். 14 பேர் போதை மருந்து குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள். 8 பேர் கடைகளில் திருடியதற்காகக் கைது செய்யப்பட்டவர்கள். 21 பேர் தற்போது குற்றவழக்குகளில் பிரதிவாதியாக கோர்ட்டுக்குச் செல்பவர்கள். 84 பேர் கடந்த ஆண்டில் குடித்துவிட்டு வாகனம் ஓட்டியதற்காகக் கைது செய்யப்பட்டவர்கள்.

இத்தகைய குற்றவாளிகள் நிறைந்த இடம் எது? அது சிறைச்சாலை அல்ல; அது 500-க்கும் மேற்பட்டோர் பணியாற்றும் இடம். நாட்டின், ஏன், உலகின் தலைவிதியை அவர்கள்தான் தீர்மானிக்கிறார்கள். 535 உறுப்பினர்களைக் கொண்ட அமெரிக்க நாடாளுமன்றம்தான் அந்த இடம்! இந்த ஆதாரங்கள் அனைத்தும் அமெரிக்கப் புலனாய்வுத்துறையின் ஆவணங்களிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளது.

சிறு சிறு குற்றங்களில் ஈடுபட்டதாகப் பட்டியலிடப்படும் இவர்கள்தான் ஆண்டுதோறும், நூற்றுக்கணக்கான கருப்புச் சட்டங்களை இயற்றி உள்நாட்டு மக்களையும் உலக மக்களையும் ஒடுக்க வழிவகுக்கும் மிகப் பெரிய குற்றவாளிகள். ஆக்கிரமிப்புப் போர், காலனியாதிக்கம், மேலாதிக்க நோக்கங்களுடன் உலகை அடக்கி ஒடுக்கிச் சூறையாடும் அமெரிக்க வல்லரசின் சட்டபூர்வ குற்றவாளிகளின் கூடாரம்தான் அமெரிக்க நாடாளுமன்றம். அதன் தலைமைக் குற்றவாளிதான் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்!

❑



படிப்பகம்

www.padippakam.com

## ஜெயா – எதிர்க்கட்சிகள் இணைந்து வழங்கும்

# சட்டமன்ற சடுகுடு

கடந்த மார்ச் 21-ஆம் தேதி தமிழக சட்டமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் ஆரம்பமானது. பார்ப்பன பயங்கரவாதி ஜெயலலிதாவால் தாக்கல் செய்யப்பட்ட தமிழக பட்ஜெட் சட்டமன்றத்திற்கு வெளியே பலமுனைகளால் தாக்கப்பட்டது. ஆனால், பட்ஜெட் நாளன்று ஜெயலலிதாவிடம் எதிர்க்கட்சியினர் சட்டமன்றத்தில் நடந்து கொண்ட விதம் இதற்கு நேரெதிராக இருந்தது.

ஜெயலலிதா வந்தவுடன் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் துரைமுருகன் வணக்கம் தெரிவித்து, சிரித்து சிரித்து பேசினார். பக்கத்தில் கறுப்புச் சட்டை அணிந்திருந்த 'மார்க்சிஸ்ட்' கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் ஹேமச்சந்திரனைப் பார்த்து ஜெயலலிதா புன்னகைத்தார். உடனே, ஹேமச்சந்திரன் பணிவாக ஜெயலலிதாவின் அருகில் சென்று, கருப்புச் சட்டை அணிந்து வந்ததற்கான காரணத்தைச் சொன்னார். மீண்டும் ஜெயலலிதா புன்னகைத்தார். ஆக, பட்ஜெட் கூட்டத் தொடர் இனிதே துவங்கியது.

தி.மு.க. துணைத்தலைவர் துரைமுருகன் எழுந்து ''அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் கொடுங்கள்'' என்று இருகரம் உயர்த்தி வேண்டினார். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிரித்தனர். ''கேலி செய்யாதீர்கள், உருக்கமாகக் கேட்கிறேன்'' என்று மீண்டும் ஒருமுறை தலைக்குமேல் இரு கரம் கூப்பி நாலாபக்கமும் திரும்பி வணங்கினார்.

பிறகு, எதிரணியினர் பட்ஜெட்டைப் பற்றி பல சூடான – சுவையான கேள்விகளைத் தொடர்ந்தனர். இந்த சமயத்தில் ''பைத்தியக்காரன் பத்தும் சொல்வான் போகட்டும் விட்டு விடு'' என்று ராகம் பாடினார், பேரவைத் துணைத்தலைவர் வரகூர் அருணாச்சலம். அவரது பாடலை ரசித்துக் கேட்ட முதல்வர் ''நல்லா பாடறீங்க'' என்றார். ''நல்ல பாடுறார் இல்ல'' என்று பக்கத்திலிருந்த அமைச்சர் பன்னீர் செல்வத்திடம் சிலாகித்தார். ''எப்படிப்பட்ட இசை மேதை நமக்குத் துணை தலைவராக கிடைத்திருக்கிறார்'' என்று மிகவும் பெருமைப்பட்டார், பேரவைத் தலைவர் காளிமுத்து.

நீண்டநேரம் நையாண்டியை ரசித்த சட்டமன்றம், எதிர்பாராத விதமாக சோகம் ததும்பும் சூழ்நிலைக்கு மாறியது. பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு தமிழக சட்டசபையில் நடந்த ஜெயலலிதாவின் சேலைகிழிப்பு நாடகம் மீண்டும் விவாதத்திற்கு உள்ளானது.

''இப்போது, எதிர்க்கட்சி துணைத் தலைவராகயிருக்கும் துரைமுருகன்தான் என்னை மானபங்கப்படுத்தி சேலையைக் கிழித்தார்'' என்றார் ஜெயலலிதா. அப்போது அ.தி.மு.க.விலிருந்து இப்போது தி.மு.க.வுக்கு மாறியிருக்கும் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், ''அ.தி.மு.க.விலிருந்து எங்களைப் போயஸ் தோட்டத்துக்கு ஜெயலலிதா அழைத்து, பேரவையில் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று விவரித்தார். தாம் கூறியப்படி நடந்து கொண்டால், தி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிடலாம்; அதற்குரிய தகவல் நமக்கு டில்லியிலிருந்து வந்துள்ளது என்றார். உண்மையில் அப்போது நடந்தது, நாடகம்'' என்றார்.

திகில் நிறைந்த சோகமான பழைய நினைவுகளுக்குள் சட்டமன்றம் மூழ்கியிருந்த போதே, போலீசின் அரைடவுசர் கதை வில்லுப்பாட்டு பாணியில் நிகழ்த்தி காட்டப்பட்டது.

போலீசு மானிய கோரிக்கையில், தி.மு.க. எம்.எல்.ஏ. ஜே. அன்பழகன், போலீசின் சிரமங்களைப் பட்டியலிட்டு, அதன் சேவைகளைப் பாராட்டினார். மேலும், ''எங்கள் தலைவர் கலைஞர் ஆட்சியில் தான் காவலர்கள் அரைக்கால் சட்டையுடன் இருந்த நிலைமை மாறி அவர்களுக்கு முழுப் பேண்ட் அளிக்கப்பட்டது'' என்றார். பா.ம.க. சட்டமன்றத் தலைவர் ஜி.கே. மணி, ''காவல்துறையை மேலும் நவீனப்படுத்த வேண்டும். அதற்கு ஒதுக்கியிருக்கும் பணம் போதுமானதல்ல'' என்றார். உறுப்பினர்கள், குலவைச் சத்தம் போடாத குறையாக, போலீசு மகிமையைச் சொல்லி மாய்ந்து போனார்கள். அப்படியே குலத்தெய்வ வழிப்பாட்டை மறக்காமல், தங்கள் தலைவர்கள் மீது புகழ் பாடினார்கள். பா.ம.க. உறுப்பினர் கோவிந்தசாமி ''இதய தெய்வம் டாக்டர் அய்யா, டாக்டர் சின்ன அய்யா (ராமதாஸ் மகன் அன்புமணி) ஆகியோருக்கு நன்றி தெரிவித்து என் பேச்சைத் துவங்குகிறேன்'' என்றார். உடனே சட்ட அமைச்சர் ஜெயக்குமார், ''செஞ்சிக் கோட்டை மீது ஏறியவர்கள் எல்லாம் தேசிங்கு ராஜா அல்ல. மீசை வைத்தவர்கள் எல்லாம் கட்டபொம்மன்கள்

சட்டமன்ற கண்ணியம்: கட்டப் பஞ்சாயத்து மூலம் எதிர்க் கட்சிகளை மொத்தமாக துரத்திவிட்டு நிறைவேற்றப்படும் பட்ஜெட்.





படிப்பகம்

www.padippakam.com

அல்ல. இதய தெய்வம் ஒருவர்தான்; அது அம்மாதான்'' என்றார்.

சட்டசபையில் எந்தப் பிரச்சினையும் பேசாமல் சொரணையற்று உட்கார்ந்திருந்த பி.ஜே.பி. உறுப்பினர்கள் அவ்வப்போது அம்மாவுக்கு ஆதரவாக வாய் திறந்தார்கள். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர், சிவபுண்ணியம், ''பா.ஜ.க.வுக்கு மக்கள் பிரச்சினைப் பற்றி கவலையில்லை. 50 பைசா கற்பூரம் இருந்தால் போதும்; ராமன் பெயரால் சூடம் கொளுத்தி ஆட்சியைப் பிடித்துவிடுவார்கள்'' என்றார்.

கோபத்தில் முகத்தையே சூலமாக்கிய பா.ஜ.க. சட்டமன்ற தலைவர் எச். ராஜா, ''தகரம் கண்டுபிடிப்பதற்கு முன்பே, உண்டியலைக் கண்டுபிடித்தவர்கள் கம்யூனிஸ்டுகள். உண்டியலைக் குலுக்கிக் கொண்டு வாழும் கம்யூனிஸ்டுகளுக்கு பா.ஜ.க. பற்றிப் பேச தகுதியில்லை'' என்றார்.

உண்டியல் பற்றி விவாதம் நடந்தபோது ஜெயலலிதா ரசித்து சிரித்தார். தன் பங்குக்கு கம்யூனிஸ்டுகளைச் சரமாரியாக தாக்கினார். ''எங்கள் தயவில் வெற்றி பெற்றுவிட்டு இப்போது சதாசர்வகாலமும் எங்களையே குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றார். காற்றுப்போன பலூனாக ஜி. பழனிச்சாமி ''நீங்கள் ஆதரிக்காத நேரத்திலும் நாங்கள் இந்த பேரவைக்கு வந்திருக்கிறோம்'' என்றார்.

ருசிகரவாதம், சுவையான விவாதம், குபீர் சிரிப்பு, நீண்ட சிரிப்பு இவற்றுக்கு மத்தியில் எதிரணியினர் கண்ணீர் மல்க வேண்டினார்கள்; கண் சிவக்க பேசினார்கள். சென்னை ராணி மேரிக் கல்லூரி மாணவிகள் போராட்டம், அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் போராட்டம், வியாபாரச் சங்கத் தலைவர் வெள்ளையன் கைது, சட்டசபையிலிருந்து தி.மு.க. உறுப்பினர்களை சபாநாயகர் தொடர்ந்து வெளியேற்றியது பற்றியெல்லாம் உள்ளம் உருக பேசினார்கள். ஓட்டுப் போட்ட மக்களுக்கு அல்ல; வெற்றி பெற்ற சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமாவது ஜனநாயக தீர்த்தம் தெளிக்குமாறு ஜெயலலிதாவிடம் வேண்டினார்கள். கோயில்களில் மக்களுக்கு அன்னதானம் வழங்குவது



**அவையில் இருந்து வெளியேற்றப்படுவதற்கு புன்சிரிப்புடன் ஒத்துழைக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி பேரவை தலைவர் ஜி. பழனிச்சாமி: சட்டமன்ற விளையாட்டு.**

போல், உறுப்பினர்களுக்கு சட்டசபையில் ஜனநாயகம் வழங்க வேண்டும் என்று மன்றாடினார்கள்.

அக்மார்க் ஜனநாயக விரோதி ஜெயலலிதா, ஜனநாயக பித்து பிடித்து அலையும் எதிரணியினர் மீது சட்டமன்ற கண்ணியம் என்ற விபூதியை எடுத்து தூவினார். ''சட்டமன்ற விதிகளுக்கும் மரபுகளுக்கும் முழு மரியாதைக் கொடுக்க வேண்டும். அரசியல் காரணங்களுக்காக சட்டமன்ற விதிகளைப் பலியாக்கி விடக் கூடாது. நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் பிரச்சினைகளைச் சட்டமன்றத்திற்குள் பேசக் கூடாது. சட்டமன்றத்திற்குள் நடக்கும் பிரச்சினைகளை நீதிமன்றம் கேள்வி கேட்கக் கூடாது. அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தர பகைவர்களும் இல்லை. இதன்படி நடந்து கொண்டால் நிரந்தர நன்மையுண்டு. இதுதான் சட்டமன்ற ஜனநாயக கோட்பாடு. இந்த மரபைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கருணாநிதி பாணியிலேயே நீண்ட பிரசங்கங்கள் செய்தார். ஜனநாயகத்தை எளிமையாக புரியவைப்பதற்காக கருணாநிதி பாணியில் குட்டிக் கதைகள், குறள் மேற்கோள்கள், சொல்லாடல், உரை வீச்சு, ஒருவரி கவிதை என்று தமிழ் மழை பொழிந்தார். இப்படியாக பட்ஜெட் விவாதம் இறுதிக் கட்டத்தை ஒரு வழியாக அடைந்தது.

முத்தாய்ப்பாக, தி.மு.க. துணைத் தலைவர் துரை முருகன், ''எப்படியிருந்தாலும் இருவரில் (அ.தி.மு.க., தி.மு.க.) ஒருவருக்குத்தான் தமிழகத்தின் ஆட்சி'' என்றார், சிரித்துக் கொண்டே. ஆனால், அ.தி.மு.க. உறுப்பினர்களோ, ''அடுத்த ஆட்சியும் எங்களுடையதுதான்'' என்றனர்.

எதிரணியினர் சட்டசபையில் பட்ஜெட் விவாதம் நடத்திய யோக்கியதை இதுதான். எதிர்க்கட்சிகளின் அரசியல் பேடித்தனத்தை மூலதனமாக்கி பார்ப்பன பயங்கரவாதி ஜெயலலிதா, பேயாட்டம் போடுகிறார். இதற்கெதிராக மக்கள் திரள் போராட்டங்களைக் கட்டியமைக்க வக்கற்ற எதிரணியினர் ''ஓராயிரம் முறை கூட சிறைச் செல்ல தயங்க மாட்டோம்'' என்று ஊரை ஏமாற்றிக் கொண்டு திரிகிறார்கள். 'ஒரு கோடிக்கு மேல் உறுப்பினர்களைக் கொண்ட கட்சி' என்று தங்கள் படங்களுக்கு பின்னால் புலியையும் சிங்கத்தையும் வரைந்து கொண்டு விலங்குகள் போல் கர்ஜிக்கும் தலைவர்கள், சட்டசபையில் வாலறுந்த நரியாக வெளிநடப்பு போராட்டம் செய்து பொழுதைக் கழிக்கிறார்கள். தங்களுடைய தானைத் தலைவர்களைக் கைது செய்தால் பேருந்துகளை கொளுத்தி, கடைகளை உடைத்து ஆர்ப்பாட்டம் செய்யும் இக்கும்பல், மக்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க மறுக்கிறது. பாசிச தாக்குதலில் மக்கள் திணறும்போது 'டாடா' காண்பித்து சிறைக்கு சென்று தப்பித்துக் கொள்கிறது. சிறையில் சோம்பேறி சுகத்தை அனுபவித்து விட்டு மீண்டும் 'தியாகி' யாக வலம் வருகிறது.

ஆக, இக்கும்பல், எதிரணி என்றாலும் ஓரணி என்றாலும் மக்களுக்குக் கிடைக்கும் பலன் இருப்பதையும் இழப்பதுதான். உழைக்கும் மக்கள் தங்களுக்கான போராட்டத் தலைமையைச் சட்டமன்ற - நாடாளுமன்ற வடிவங்களுக்குள் தேடிப் பயனில்லை. புரட்சிகர வன்முறையைப் போராட்ட பாதையாக தேர்ந்தெடுத்து பதிலடி கொடுப்பதைத் தவிர வேறு வழியுமில்லை.

❑ பச்சையப்பன்


படிப்பகம்

# ஆக்கிரமிப்புப் போர் முடிந்தது மறுகாலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டம் தொடங்கியது

ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போர் தொடங்கி நடந்த மூன்றாவது வாரத்திலேயே, அந்நாட்டை விரைவாகவும், எளிதாகவும் அமெரிக்க - இங்கிலாந்துக் கூட்டணிப் படைகள் கைப்பற்றிக் கொண்டுவிட்டன. ஏகாதிபத்திய கூட்டணிப் படைகள் பாக்தாத் நகரைக் கைப்பற்ற நடத்தப் போகும் சண்டை, நீண்டதாகவும் விடாப்பிடியாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பாக்தாத் நகரமோ மூன்றே நாட்களில் கூட்டணிப் படைகளிடம் விழுந்தது.

ஈராக்கின் தென்பகுதியைச் சேர்ந்த பஸ்ரா, கர்பாலா, நாசிரியா நகரங்களையும், வடபகுதியில் உள்ள கிர்குக், மோசுல் நகரங்களையும் கைப்பற்ற கூட்டணிப் படைகள் ஏறத்தாழ பதினைந்து நாட்கள் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. இத்துணைக்கும் ஈராக்கின் தென்பகுதியிலும், வடபகுதியிலும் அமெரிக்காவுக்குச் சாதகமான நிலைமைகள் இருந்தன.

ஆனால், சதாமின் முழுக் கட்டுப்பாட்டிலும், குடியரசுப் படைகளின் பாதுகாப்பிலும் இருந்த பாக்தாத் நகரமோ, சீட்டுக்கட்டுச் சரிவது போல, சடாரென வீழ்ந்தது. கூட்டணிப் படைகள் பாக்தாத்தினுள் நுழைந்தவுடனேயே, சதாமும், அவரது மகன்களும், அமைச்சரவையும், குடியரசுப் படையின் தளபதிகளும் மாயமாய் மறைந்து போனார்கள்.

அதேபொழுதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் எதிர்பார்த்த சில விசயங்கள், தலைகீழாக மாறி, அதனை அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டன. சதாம் உசேன் ஆட்சியின் கீழ் புறக்கணிக்கப்பட்டிருந்த ஷியா முசுலீம்கள், கூட்டணிப் படைகள் ஈராக்கினுள் நுழைந்தவுடனேயே, சதாமுக்கு எதிராகக் கலகத்தில் இறங்குவார்கள் என அமெரிக்கா எதிர்பார்த்தது.

ஆனால், அமெரிக்காவின் நப்பாசைக்கு எதிராக, ஷியா முசுலீம்கள் கூட்டணிப் படைகளை எதிர்த்துப் போராடத் தொடங்கினர். சதாம் உசேனை விரட்டியடித்த பின்னர், ஈராக் மக்கள் கூட்டணிப் படைகளை மலர்க்கொத்து கொடுத்து வரவேற்பார்கள் என அமெரிக்கா எதிர்பார்த்தது. ஆனால், அமெரிக்கா - இங்கிலாந்து ஏகாதிபத்தியக் கூட்டணி ஈராக்கை ஆக்கிரமித்துக் கொண்ட மறுநிமிடமே, ஈராக் மக்கள் மறுகாலனியாதிக்கத்திற்கு எதிரான போரைத் தொடங்கி விட்டனர்.


***

சதாம் உசேன் என்ற சர்வாதிகாரியின் பிடியில் இருந்து ஈராக் மக்களை விடுதலை செய்துவிட்டதாக ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்கள் தம்பட்டம் அடித்துக் கொள்கின்றனர். ஆனால், 13-ஆம் நூற்றாண்டில் ஈராக் மீது படையெடுத்த மங்கோலியர்களை விட, மிகவும் காட்டுமிராண்டித்தனமான முறையில், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களால் பாக்தாத் நகரம் சூறையாடப்பட்டதைக் கண்டு, உலகமே ஜார்ஜ் புஷ் - பிளேர் கும்பல் மீது காரி உமிழுகிறது.

''மார்ச் 20 தொடங்கி ஏப்ரல் 5 முடிய ஈராக் மீது கூட்டணிப் படைகள் 6,350 டன் எடை கொண்ட குண்டுகளை வீசியிருப்பதாகவும், இதில் இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை மட்டும் 1,252 ஆகும்'' என அமெரிக்காவைச் சேர்ந்த மார்க் ஹெரோல்டு என்ற பொருளாதாரப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஏப்ரல் 5-க்குப் பிறகுதான் கூட்டணிப் படைகள் பாக்தாத்தை நோக்கி நகரத் தொடங்கின. பாக்தாத் சண்டையின் பொழுது, ''தங்களுக்குக் குறுக்கே வரும் எதனையும் சுட்டு வீழ்த்தும்படி, கூட்டணிப் படைகளுக்கு உத்தரவிடப்பட்டது. இதனால் பாக்தாத் நகரைவிட்டு அகதிகளாகத் தப்பியோடிய பொதுமக்கள் கூட, எவ்வித ஈவு இரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர். குண்டு வீச்சில் காயம் பட்ட பொதுமக்களை ஏற்றிச் சென்ற ''ஆம்புலன்ஸ்கள்'' கூட, கார் வெடிகுண்டுகள் எனக் கருதப்பட்டு, பீரங்கிகளால் தாக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டன.

6,000 ஆண்டு பழமை வாய்ந்த மெசபடோமியா நாகரிகத்தின் சின்னங்களும், கலைப் பொருட்களும் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த ஈராக்கின் தேசிய அருங்காட்சியகங்களும், குரான் நூலகமும் ஏகாதிபத்திய கைக்கூலிகளால் கொள்ளையடிக்கப்பட்டு, தீ

''எங்கள் நாட்டை விட்டு வெளியேறு'' என்ற முழக்கத்துடன் பாக்தாத் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.



www.padippakam.com

வைத்துக் கொளுத்தப்பட்டன.

இந்தக் கொள்ளையையும், தீ வைப்பையும் பற்றி ராபர்ட் ஃபிஸ்க் என்ற இலண்டன் பத்திரிகையாளர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''கொள்ளையடிக்க வந்தவர்களிடம், எங்கு கொள்ளையடிக்க வேண்டுமோ, அதற்குரிய வரைபடம் இருந்தது. கொள்ளைக் கும்பல்கள், பாக்தாத் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்துகளில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். என்னுடைய பத்திரிகை செய்திகள் அமெரிக்காவின் இராணுவ சோதனைச் சாவடிகளைக் கடப்பதைவிட, கொள்ளையடிக்கப்பட்ட அரிய கலைப்பொருட்கள் மிக விரைவாகவும், எளிதாகவும் கடந்து போனதாக''க் குறிப்பிடுகிறார் அவர்.

பாக்தாத்தின் ஹைஃபா நிழற் சாலையில் இருந்த அரசாங்கக் கட்டிடத்தைக் காவல் காத்துக் கொண்டிருந்த இரு காவலாளிகளை அமெரிக்க இராணுவமே சுட்டுக் கொன்றுவிட்டு, அந்தக் கட்டிடத்தின் நுழைவாயில் கதவைப் பீரங்கியைக் கொண்டு இடித்துத் தகர்த்துவிட்டு, அதன்பின் அரபு மொழி பெயர்ப்பாளர்கள் மூலம் மக்களைக் கொள்ளையடிக்க வருமாறு அமெரிக்க இராணுவ வீரர்கள் அழைத்ததையும் ராபர்ட் ஃபிஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

சதாம் உசேன் அரசின் கீழ் இருந்த 35 அரசு தலைமை அலுவலகங்கள் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப்பட்ட பொழுது, எண்ணெய் அமைச்சகத்தின் தலைமை அலுவலகமும், உள்துறை அமைச்சகத்தின் தலைமை அலுவலகமும் யாரும் நுழைந்துவிடாதபடி அமெரிக்க இராணுவத்தால் பாதுகாக்கப்பட்டன. ஈராக்கின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையிடும் உரிமை அமெரிக்காவைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்பதுதான் இந்த பாதுகாப்புக்குப் பொருள்.

''இப்படிக் கொள்ளையடிப்பவர்கள் ஈராக்கியர்களே அல்ல'' என பாக்தாத் நகர மக்கள் மனம் வெதும்பிக் கூறியபொழுது, இங்கிலாந்தின் இராணுவ அமைச்சர் ஜியோப் ஹோான், ''அவர்கள் தங்களின் சொந்த சொத்துக்களை விடுதலை செய்வதாக''ப் புகழ்ந்து தள்ளினார். அமெரிக்காவின் இராணுவத் துறைச் செயலாளரும்,



ஃபல்லுஜா நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் மீது அமெரிக்க இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தனது ஒரு காலை இழந்துவிட்ட ஈராக்கியர்.

இந்தப் போரின் சூத்திரதாரியுமான டொனால்ட் ரம்ஸ்ஃபெல்ட், ''விடுதலையடைந்த மக்கள் இப்படிப்பட்ட குற்றங்களில் ஈடுபடுவது சகஜம்தான்'' என்றார். மனித நாகரிகத்துக்கு எதிரான கொலை, கொள்ளை, தீ வைப்பு, சூறையாடலை ஆதரித்துப் பேசும் இந்த ஏகாதிபத்தியக் கும்பல், ஈராக்கிய மக்களுக்கு விடுதலையும், ஜனநாயகமும் வழங்கப் போவதாகக் கூறுவது நகைக்கத்தக்கது.

***

ஈராக்கை மறுசீரமைப்பது, ஈராக்கிய மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வது என்ற போர்வையில் ஒரு காலனிய அரசு இயந்திரத்தை ஈராக் நாட்டின் மீது திணித்துள்ளது, அமெரிக்க ஏகாதிபத்தியம். இதனின் தலைவராக ஜே கார்னர் என்ற முன்னாள் அமெரிக்க இராணுவத் தளபதி நியமிக்கப்பட்டுள்ளார். 1991-இல் நடந்த ஈராக் ஆக்கிரமிப்புப் போரில் நேரடியாகப் பங்கு கொண்ட ஜே கார்னர், இராணுவத்தில் இருந்த ஓய்வு பெற்ற பின்பு, எஸ்.ஒய். கோல்மேன் என்ற இராணுவத் தளவாட தரகு நிறுவனத்தின் தலைவரானார். இசுரேலின் யூத இனவெறி அரசோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள கார்னர், இசுரேல் அமெரிக்காவிடமிருந்து ''பேட்ரியாடிக்'' ஏவுகணைப் பெறுவதில் தரகனாகவும் செயல்பட்டுள்ளார். இப்படிப்பட்ட பின்னணி கொண்ட ஜே கார்னர்தான் இப்பொழுது ஈராக்கின் ''வைஸ்ராய்''. இவரின் கீழ் இருக்கும் 23 அமைச்சரவைகளும், அமெரிக்க அதிகாரிகளால் இயக்கப்படும். ''வைஸ்ராய்'' கார்னர் இந்த ஆக்கிரமிப்புப் போருக்குத் தலைமையேற்று நடத்திய அமெரிக்க ராணுவத் தளபதி டோமி பிராங்க்ஸுக்குப் பதில் சொல்லி கடமைப்பட்டவர்.

இப்படிப்பட்ட வெளிப்படையான, இராணுவ - காலனிய அரசு இயந்திரத்தை வைத்துக் கொண்டு நீண்ட நாள் காலந்தள்ள முடியாது என்பதால், இதற்கு ஒரு ஈராக்கிய முகமூடியை மாட்டிவிடத் துடிக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். ஈராக்கிய தேசிய காங்கிரசு என்ற பெயர்ப் பலகை அமைப்பை வைத்துக் கொண்டு, இலண்டனில் பொழுதுபோக்கிக் கொண்டிருந்த அகமது சலாபி என்ற அமெரிக்கக் கைக்கூலியை, ஈராக்கின் அதிபராக்கிவிட, அமெரிக்காவின் துணை குடியரசுத் தலைவர் டிக் செனியும், அமெரிக்காவின் இராணுவத்துறைச் செயலர் டொனால்ட் ரம்ஸ்ஃபெல்டும் திரைமறைவில் காய்களை நகர்த்தி வருகின்றனர்.

இந்த அகமது சலாபி முப்பது ஆண்டுகளுக்கு முன்பே ஈராக்கை விட்டு வெளியேறிச் சென்று விட்டான். ஜோர்டான் நாட்டில் ஒரு ''பைனான்சு'' கம்பெனியை நடத்தி, மக்கள் பணத்தை மோசடி செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டதால், சலாபி ஜோர்டானில் இருந்து இலண்டனுக்குத் தப்பியோடினான். இப்படிப்பட்ட மோசடிப் பேர்வழியை ஈராக் மக்கள் மட்டுமல்ல, பிற ஏகாதிபத்திய கைக்கூலி அமைப்புகளும் கூட ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

ஜே கார்னர் பதவியேற்றவுடனேயே, அமெரிக்காவுக்குப் பொருத்தமான ஒரு ஈராக்கிய தலையாட்டி பொம்மையைத் 'தேர்ந்தெடுப்பதற்காக', ஈராக்கின் ஷியா, சன்னி முசுலீம் குழுக்கள், குர்து இனக் குழுக்கள், பழங்குடி இனத் தலைவர்கள், ஏகாதிபத்திய கைக்கூலி அமைப்புகள் ஆகியோரைக் கூட்டி, ''அர்'' என்ற நகரில் ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். ''இறைத்தூதர் ஆபிரகாம் பிறந்த ஊரில், சுதந்திர ஈராக்கும் பிறப்பதாக'' அவர் தம்பட்டம் அடித்த அதேவே



படிப்பகம்

www.padippakam.com

ளையில், கூட்டம் நடந்த இடத்திற்கு வெளியே 20,000 மக்கள் திரண்டு அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள்.

✱ சதாம் உசேனின் குடியரசுப் படையைச் சேர்ந்த முன்னாள் அதிகாரி அல்-சுபாரி என்ற கைக்கூலியை, அமெரிக்க இராணுவம் மோசுல் நகரின் கவர்னராக நியமித்து. இதற்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தில், அமெரிக்க இராணுவத்திற்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் நடந்தது. இதில் 10 ஈராக்கியர்கள் அமெரிக்க இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்; 16 பேர் படுகாயமடைந்தனர்.

✱ கட் நகரில் அமெரிக்கக் கைக்கூலி அகமது சலாபிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடந்தது. அந்நகரைச் சேர்ந்த ஷியா மத குரு ஒருவர் தன்னை கவர்னராக அறிவித்துக் கொண்டதைத் தடுக்க அமெரிக்க இராணுவம் முயன்றபொழுது, உள்ளூர் மக்கள் அமெரிக்க இராணுவத்தை முற்றுகையிட்டு, பின்வாங்கச் செய்தனர்.

✱ ஏப்ரல் 18 அன்று பாக்தாத் நகரில் அமெரிக்காவின் இராணுவத் தலைமையகம் அமைந்துள்ள பாலஸ் தீனம் விடுதியின் முன்பு ஷியா மற்றும் சன்னி முசுலீம் குழுக்கள் இணைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

✱ ஏப்ரல் 29 அன்று ஃபல்லுஜா என்ற நகரில் தடையை மீறி நடந்த இரவு நேர ஆர்ப்பாட்டத்தில் 13 ஈராக்கியர்கள் அமெரிக்க இராணவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்; 75-க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கிய நகரங்களில் தினந்தோறும் நடந்துவரும் இந்த ஆர்ப்பாட்டங்கள், புரட்சிகரத் தலைமையின் கீழோ, ஒருங்கிணைந்த முறையிலோ நடைபெறாவிட்டாலும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை உலக மக்களின் முன் அம்பலப்படுத்துவதில் வெற்றி பெற்றுவிட்டன. சதாம் உசேனின் சர்வாதிகார ஆட்சியில் இருந்து ஈராக் மக்களை விடுதலை செய்துவிட்டதாகப் புளுகிக் கொண்டு திரியும் ஜார்ஜ் புஷ் - பிளேரின் முகங்களில் கரியைப் பூசிவிட்டன.

✱✱✱

''சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரித்துக் குவித்து வைத்திருக்கிறார்; அதைக் கண்டுபிடித்து அழிப்பதற்கு, ஐ.நா. ஆய்வுக் குழுவோடு ஒத்துழைக்க மறுக்கிறார்'' என்ற காரணங்களை முன்வைத்துதான் அமெரிக்காவும், அதன் ஜால்ரா இங்கிலாந்தும் ஈராக் மீது போர் தொடுத்தன. சதாமின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு பதினைந்து நாட்களுக்கு மேலாகிவிட்டது. ஆனாலும், சதாம் குவித்து வைத்திருப்பதாகச் சொல்லப்பட்ட பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களின் ஒரு துரும்பைக் கூட, இன்னும் கூட்டணிப் படைகளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தேடிக் கண்டுபிடிக்க கால அவகாசம் தேவை என ஐ.நா. ஆய்வுக் குழு கேட்டபொழுது, அதைத் தடாலடியாக மறுத்த அமெரிக்கா, இப்பொழுது ஆயுதங்களைக் கண்டுபிடிக்கத் தனக்கு கால அவகாசம் வேண்டும் எனத் தெனாவட்டோடு கூறுகிறது.

பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தேடிக் கண்டுபிடித்து அழித்த பிறகுதான் ஈராக்கின் மீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்பதுதான் போருக்கு முன்பாக ஐ.நா. மூலம் அமெரிக்கா விதித்த நிபந்தனை. இப்பொழுதோ ஈராக் மீதான பொருளாதாரத் தடைகளை உடனே விலக்க வேண்டும் என ஐ.நா.வை மிரட்டுகிறது. ''சதாம் போய்விட்டார்; அதனால் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களும் அழிந்து விட்டன'' என்பதுதான் இப்பொழுது அமெரிக்காவின் 'கொள்கை'! அமெரிக்காவின் இந்த இரட்டை வேடம், ஈராக் மீது ஆக்கிரமிப்புப் போரை நடத்துவதற்காகவே, பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள் என்ற பீதி உருவாக்கப்பட்டது என்ற உண்மையை வெட்ட வெளிச்சமாக்கி விட்டது.



பாக்தாத் நகரில் இருந்த அமெரிக்க ஆயுதக் கிடங்கு வெடித்ததில் தனது உறவினர்கள் அனைவரையும் பறிகொடுத்துவிட்டுக் கதறியழும் முந்திர் சாஃபர்.

✱✱✱

'விடுதலை'யடைந்து விட்ட ஈராக் நகரங்கள் அனைத்திலும் காலரா, வயிற்றுப் போக்கு, டைபாய்டு போன்ற தொற்று நோய்கள் வெகு வேகமாகப் பரவி வருகின்றன. ஈராக்கை விடுதலை செய்ய அமெரிக்கா நடத்திய குண்டுவீச்சினால் குடிநீர்க் குழாய்கள் சிதைந்து போனதால், ஈராக் மக்கள் சாக்கடை கலந்த அசுத்தமான நீரைக் குடிக்கிறார்கள். அதனால்தான் தொற்று நோய்கள் பரவுவதாக ஈராக் மருத்துவர்கள் கூறுகிறார்கள். இப்படித் தொற்று நோய்களை உருவாக்கி, ஈராக் மக்களை அமெரிக்கா கொல்வது உயிரியல் போர் ஆகாதா?

பாக்தாத் நகரின் குடியிருப்புப் பகுதியில் இருந்த அமெரிக்காவின் ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியதில், ஐம்பதுக்கும் அதிகமான ஈராக்கியர்கள் இறந்து போனார்கள். நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தார்கள். இது பேரழிவு கிடையாதா? இந்தக் கொலைக் குற்றங்களுக்காக அமெரிக்காவின் ஜார்ஜ புஷ்ஷையும், டொனால்ட் ரம்ஸ்ஃபெல்டையும், பிரிட்டனின் டோனி பிளேரையும் போர்க் குற்றவாளிகளாக அறிவிக்கலாம்.

இந்தப் போர்க் குற்றவாளிகள், இப்பொழுது ஈராக்கின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையடிக்கும் வேலையில் மும்முரமாக இறங்கிவிட்டார்கள். அமெரிக்காவின் துணை அதிபர் டிக் செனிக்கும், அமெரிக்காவின் இராணுவத்துறைச் செயலாளர் ரம்ஸ்ஃபெல்டுக்கும் நெருக்கமான பெக்டெல், ஹாலிபர்டன் ஆகிய அமெரிக்க தேசங்கடந்த நிறுவனங்களுக்கு,



படிப்பகம்

www.padippakam.com

ஈராக்கின் எண்ணெய் வளமும், மறுசீர மைப்பிற்கான வர்த்தக ஒப்பந்தங் களும் தூக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்ளை தங்கு தடையின்றி நடக்க வேண்டும் என்பதற்காகவே, அமெரிக்கா ஈராக் மீதான பொருளா தாரத் தடைகளை உடனடியாக நீக்கச் சொல்லுகிறது. இந்தக் கொள்ளையில் தங்களுக்கும் பங்கு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, போரை 'எதிர்த்த' பிற ஏகாதிபத்தியங்களும், இப்பொழுது அமெரிக்காவிற்கு ஒத்து ஊதத் தொடங்கிவிட்டன.

இது ஒருபுறமிருக்க, சதாம் குவித்து வைத்திருந்த பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள் போருக்கு முன்பாகவே ஈராக்கின் எல்லையைத் தாண்டி சிரியா வுக்குக் கடத்தப்பட்டு விட்டதாகவும், அந்த நாடே பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரித்துக் குவித்து வைத்திருப்பதாகவும் அமெரிக்கா புதிய குண்டைத் தூக்கிப் போட்டுள் ளது. லெபனானில் இருந்து கொண்டு இசுரேலை எதிர்த்துப் போராடும் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளுக்கும், பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கும் சிரியா அடைக் கலம் தருவதால், பயங்கரவாதத்தின் மையமாக சிரியா இருப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது. இதன் மூலம், அமெரிக்கா நடத்தி வரும் மேலா திக்கப் போரின் அடுத்த குறி சிரியா என்பதை அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்துள்ளது.

சின்னஞ்சிறு நாடான சிரியா மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுவதன் மூலம், ஈராக்கில் குவிக்கப்பட்டுள்ள ஒரு இலட்சத் துக்கும் அதிகமான துருப்புகளை அங்கேயே நிறுத்தி வைத்து, ஈராக்கை அமெரிக்காவின் இன்னுமொரு இரா ணுவத்தளமாக மாற்றிவிட முயலுகி றது, அமெரிக்கா. சிரியாவைத் தொடர்ந்து மிரட்டுவதன் மூலம், அந்நாடு இசுரேலுடன் சமாதானமாகப் போகும்படி நிர்ப்பந்திக்கிறது. ரசி யாவில் இருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்துவரும் இசுரேலுக்கு, ஈராக்கின் எண்ணெயை ஏற்றுமதி செய்வதன் மூலம், இசுரேலின் பொரு ளாதாரப் பளுவைக் குறைக்கவும் திட்டம் போடுகிறது, அமெரிக்கா.

ஈராக்கின் மீது திணிக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் இராணுவ - காலனிய அரசு மேற்காசியாவில் இன்னொரு இசுரேலாக, அதாவது அமெரிக் காவின் இன்னுமொரு அடியாளாகச் செயல்படும் என்பதே உண்மை. இப்போரின் மூலம், மேற்காசியாவில் தனது பிடியை இன்னும் வலுவாக இறுக்கிக் கொள்ளும் திட்டத்தில் அமெ ரிக்கா வெற்றி பெற்றிருக்கலாம். எனினும், உலகையே தனது ஒற்றைத் துருவ அதிகாரத்தின் கீழ் கொண்டு வரத் துடிக்கும் அமெரிக்காவின் சாம்ராஜ்ஜியக் கனவு ஒரு போதும் பலிக்காது.

ஈராக்கிலும், உலகின் பிற நாடு களிலும் நடந்து வரும் மேலாதிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ரோமப் பேரரசைப் போல, சூரியன் மறையாத இங்கிலாந்து ஏகாதிபத்தியத்தைப் போல, அமெரிக்க மேலாதிக்க வல்லர சையும் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசியெறியும்!

❑ செல்வம்

7-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆட்சிக்கு எப்படித்தான், எப்பொழு துதான் முடிவு கட்டுவது? இதற்கு விடை காண முடியாத சட்டமன்ற எதிர்க்கட்சிகள் அனைத்தும் திணறு கின்றன. அடுத்துவரும் சட்டமன்ற பொதுத் தேர்தல்கள் வரை, அதாவது மேலும் மூன்றாண்டுகளுக்கு இந்தக் கொடுங்கோலாட்சியை மக்கள் சகித் துக் கொள்வதைத் தவிர வேறுவழியில் லையா? இந்த ஆட்சி மத்திய அர சினால் கலைக்கப்படவேண்டும் என்று ஒரு சில எதிர்க்கட்சிகள் கோரினாலும் ஜெயலலிதாவுடன் கள்ள உறவு கொண்டுள்ள பா.ஜ.க.வின் மைய அரசு அதைச் செய்யாது. அப்படிப் பட்ட முயற்சி எதுவும் நடைபெறாமல் பார்த்துக் கொள்வதற்கு சங்கராச்சாரி, வெங்கடராமன், சோ போன்ற பார்ப்பன அரசியல் தரகர்கள் பலரும் தயாராக உள்ளனர்.

ஜெயலலிதாவை ஆட்சி பீடமேற் றிய காங்கிரசு, இரு போலி கம்யூனிஸ் டுகள் பா.ம.க.வினர் இந்த ஆட்சிக்கு எதிராகத் திரும்பிப் பல போராட் டங்கள் நடத்தினாலும், ஜெயலலிதா வுடன் உள்ள உறவை நிரந்தரமா கவோ, முற்றாகவோ முறித்துக் கொள்ள மாட்டார்கள். இவர்களுட னான கூட்டணி உறவை முறித்துக் கொண்டு, மதச்சார்பற்ற வேடத்தைக் கலைத்துவிட்டு ஜெயலலிதாவாகப் போய் பா.ஜ.க.வுடன் கள்ள உறவை ஏற்படுத்திக் கொண்டு விட்டார். மீண்டும் ''மதச் சார்பற்ற'' கூட்ட ணிக்குத் திரும்பினால் ஜெயலலி தாவை அணைத்துக் கொள்ள இவர்கள் எப்போதும் தயார்தான்.

ஜெயலலிதாவின் நேரடி அரசியல் எதிரி கருணாநிதியும் அவரது கட்சி யும்தான். ஜெயலலிதாவை வீழ்த்துவ தற்குத் தக்க தருணம் வந்துவிட்டதாகக் கருதும் கருணாநிதி, ''இந்தக் கொடுங் கோலாட்சிக்கு எதிராக சமூகப் புரட்சி நடத்த வேண்டும், அது அமைதிப் புரட் சியாக இருக்கவேண்டும்'' என்று முழக் கமிட்டிருக்கிறார்.

இங்கே ''அமைதி வழி சமூகப் புரட்சி'' என்று கருணாநிதி குறிப்பிடு வதன் பொருள் என்ன? அடுத்த சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலுக்கான தீவிரப் பிரச்சாரம் என்பதற்கு மேல் ஏதாவது உண்டா? 1990-களின் மத்தியில் பாசிச இந்திராவின் ஆட்சிக்கு எதிராக ஜெயப்பிரகாசு நாராயணன் ''முழுப் புரட்சி''க்கு அழைப்புவிட்டார். அப்போது குஜராத், பீகார் போன்ற மாநிலங்களில் மாணவர்கள் - இளைஞர்கள் எழுச்சி ஏற்பட்டது. அப்போது ஜெயப்பிரகாசு நாராயணன் தலைமையில் எதிர்க்கட் சிகள் ஒன்று திரண்டன. ஆட்சியில் இருந்த கருணாநிதி கடைசிவரை இந்தி ராவின் அணியில் நீடிக்கவே விரும் பினார்; எம்.ஜி.ஆருடன் சேர்ந்து கொண்டு இந்திரா எட்டி உதைக்கும் வரை வெளியேறவில்லை. அதன் பிறகு ''முழுப் புரட்சி'' அணியில் கரு ணாநிதி கட்சி சேர்ந்தாலும், பாசிச இந்திரா ஆட்சிக்கு எதிராக மக்களைத் திரட்டி எழுச்சி - புரட்சி எதையும் நடத்தத் துணியவில்லை. ''தேர்தலைக் குறிவைத்து நடத்தப்படும் அறப் போராட்டங்கள்'' மக்கள் எழுச்சியாக வெடித்துவிடக் கூடாது என்பதில் கவ னமாக இருந்தார். எனவேதான் நாடு முழுவதும் இந்திரா எதிர்ப்பு அலை வீசிய போதும், தமிழ்நாட்டில் அது பிசு பிசுத்துப் போனது.

இப்போதும், இன்னமும் ஜெயலலி தாவின் கள்ளக் கூட்டுக்காரர்களுடன் உறவு வைத்துக் கொண்டிருக்கும் கரு ணாநிதி தேர்தல் கூட்டு - பிரச்சார இயக்கம், சடங்குத்தனமான ஆர்ப்பாட்டம் - பேரணி, மறியல், தர்ணா என்பதற்குமேல் எதற்கும் துணி யமாட்டார். அதிகாரத்தையும், சொத்தையும் பாதுகாத்துக் கொள்வதற் காக எத்தகைய கடைகோடி நிலைக்கும் போவதற்குத் தயங்காதவர், ஜெயல லிதா. அவரது பார்ப்பன - பாசி பயங் கரவாதத்தை அமைதிவழி - அறப் போராட்டங்களால் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது.

❑ ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

# அன்னியப் பொருட்கள் புறக்கணிப்புப் போராட்டம்: போலிகளின் சந்தர்ப்பவாதம்




ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து கேரள மக்கள் அமெரிக்க - பிரிட்டிஷ் பொருட்களைப் புறக்கணிக்கும் இயக்கத்தை வீச்சாக நடத்தி வருகின்றனர். அமெரிக்காவின் கோக் - பெப்சி குளிர்பானங்கள், குடுவை குடிநீர், தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் பிரிட்டிஷ் பன்னாட்டு ஏகபோக நிறுவனமான ''யுனிலீவ''ரின் இந்திய நிறுவனமாகிய ''இந்துஸ்தான் லீவ''ரின் சோப்புகள், ஷாம்புகள், ரொட்டி, பழக்கூழ், தேயிலை முதலான வற்றைப் புறக்கணித்து உள்நாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக, முசுலீம்கள் நிறைந்த மலபார் பிராந்தியத்தில் அமெரிக்க - பிரிட்டிஷ் பொருட்களைப் புறக்கணிக்கும் இயக்கம் குறிப்பிடத்தக்க அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது. இதர மாவட்டங்களில் இந்த இயக்கம் வீச்சாகப் பரவி வருகிறது. அமெரிக்க - பிரிட்டிஷ் நுகர் பொருட்களின் விற்பனையும் கேரளாவில் கணிசமாகக் குறைந்து விட்டதாகச் செய்திகள் வருகின்றன.

பாமாயில் இறக்குமதியால் தென்னை விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து கேரளத்தின் கூரகண்டு கிராம மக்கள் தொடங்கி வைத்த பாமாயில் புறக்கணிப்பு இயக்கத்தின் வீச்சு, கோக் குளிர்பான ஆலைக்கு எதிராக பிளாச்சிமடா கிராம மக்கள் நடத்திய தொடர் போராட்டத்தின் தாக்கம், ஈராக் மீதான அமெரிக்காவின் மேலாதிக்க ஆக்கிரமிப்புப் போரினால் ஏற்பட்ட ஆத்திரம், உலகமயத்தால் விவசாயமும் சிறு தொழில்களும் நாசமாகி வருவதால், உள்நாட்டுத் தொழிலையும் விவசாயத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று இயல்பாக ஏற்பட்ட உணர்வு ஆகியவற்றால் உந்தப்பட்ட கேரள மக்கள், இப்போது அமெரிக்க - பிரிட்டிஷ் பொருட்களைப் புறக்கணிக்கும் இயக்கத்தை முன்னுதாரண மிக்க முறையில் நடத்தி வருகின்றனர்.

அன்னியப் பொருட்கள் புறக்கணிப்பு இயக்கத்தை நடத்திவரும் பல்வேறு அமைப்புகள், காந்தியவாதிகள், இடதுசாரி குழுக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், நாட்டுப்பற்று கொண்ட எழுத்தாளர்கள் - சிந்தனையாளர்கள் இப்போது ''போர் எதிர்ப்பு அரங்கம்'' என்ற குடை அமைப்பின் கீழ் ஒன்றிணைந்து அமெரிக்க - பிரிட்டிஷ் பொருட்களைப் புறக்கணிக்கக் கோரி கேரளா முழுவதும் பிரச்சாரம் - கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். காட் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்ட கறுப்பு நாளான ஏப்ரல் 13-ஆம் தேதியிலிருந்து, கோக்-பெப்சியை முற்றாகப் புறக்கணிக்கும் மாநிலமாக கேரளத்தை மாற்றியமைப்போம் என்ற சூளுரையுடன் இவ்வமைப்பினர் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றனர். சி.பி.எம். கட்சியின் பொருளாதாரவாதியான டாக்டர் ஐசக், இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறார்.

ஆனால், அன்னியப் பொருட்களைப் புறக்கணிக்கும் மக்கள் இயக்கத்துக்குத் தலைமை தாங்கவோ, வழி நடத்தவோ சி.பி.எம். கட்சிக்கு எவ்வித அருகதையும் கிடையாது. மூன்றாண்டுகளுக்கு முன்பு, வியாபாரிகளுக்கான இலாப விகிதத்தை இந்துஸ்தான் லீவர் நிறுவனம் குறைத்ததை எதிர்த்து, கேரள வியாபாரிகள் சங்கம் (கேரள வியாபாரி - விவசாயி ஏகோபன சமிதி) இந்துஸ்தான் லீவரின் பொருட்களைப் புறக்கணிக்கும் போராட்டத்தை நடத்தியது. அப்போது ஆட்சியிலிருந்த சி.பி.எம். தலைமையிலான நாயனாரின் 'இடதுசாரி' அரசு, இந்துஸ்தான் லீவரின் பொருட்களை விற்க ''நீதி ஸ்டோர்'' எனும் கடைகளைத் திறந்து போராட்டத்தைச் சீர்குலைத்தது. அன்று பன்னாட்டு ஏகபோக நிறுவனத்தின் பொருட்களை விற்கும் விசுவாச அடியாளாக விளங்கிய சி.பி.எம். துரோகிகள்தான், அன்னியப் பொருட்களைப் புறக்கணிக்கும் மக்கள் இயக்கம் முன்னேறத் தொடங்கியதும் இன்று நாயாக வந்து ஒட்டிக் கொள்கின்றனர்.

இதேபோல், பாமாயில் புறக்கணிப்புப் போராட்டத்தை மூன்றாண்டுகளுக்கு முன்பு தென்னை விவசாயிகளும் வியாபாரிகளும் நடத்தியபோது, சி.பி.எம்-இன் 'இடதுசாரி' அரசு அதைச் சீர்குலைத்து திசை திருப்பியது. பாமாயிலை ஏற்றுமதி செய்யும் மலேசிய அரசு, கேரளத்தில் சில கி.மீ. தூரத்துக்கு இலவசமாக நெடுஞ்சாலையை அமைத்துத்தர முன்வந்தபோது 'இடதுசாரி' நாயனார் அரசு அதை விசுவாசமாக ஏற்றுக் கொண்டது. மலேசியாவிடமிருந்து பாமாயில் இறக்குமதியாவதால் பாதிப்பு ஏற்பட்டாலும், அதை ஈடு செய்துவிட்டதாகப் பசப்பியது.

இந்த உண்மைகளைக் கேரள வியாபாரி - விவசாயி ஏகோபன சமிதியினரே அம்பலப்படுத்தி வருகின்றனர். ஆட்சியதிகாரத்தில் இருக்கும்போது பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் விசுவாச அடியாளாகவும், எதிர்க்கட்சியானதும் மக்கள் போராட்டத்தில் ஒட்டிக் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடகமாடுவதுமாக உள்ள இச்சந்தர்ப்பவாதிகளை அம்பலப்படுத்தி முன்னேறுவதே, இன்று அன்னியப் பொருட்களைப் புறக்கணிக்கும் இயக்கத்தை நடத்திவரும் கேரள மக்களின் முதற்கடமையாக உள்ளது. ஓங்கட்டும் போராட்டம்! ஒழியட்டும் ஏகாதிபத்தியம்! தொலையட்டும் துரோகத்தனம்!

❑ குமார்



படிப்பகம்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

அவசியத்தையும் விளக்கி பேசினார்.



விழுப்புரத்தில்...

★ கோவையில் ஏப்ரல் 8-ஆம் தேதியன்று ம.க.இ.க. மற்றும் பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து கணபதி மூன்றாம் எண் பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ம.க.இ.க. செயலர் தோழர் மணிவண்ணன், பு.ஜ.தொ.மு. செயலர் தோழர் விளவை ராமசாமி ஆகியோர் உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் திரளான மக்கள் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

★ ஓசூரில் ஏப்ரல் 16-ஆம் தேதி மாலையில் ஐசிஐசிஐ வங்கியின் முன்பு போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ''மானமுள்ளவர்களே! கோக் - பெப்சி போன்ற அமெரிக்க பானங்களைக் குடிக்காதீர்! அது ஈராக்கிய மக்களின் இரத்தம். அமெரிக்கா, இங்கிலாந்து பன்னாட்டு கம்பெனி பொருட்களை வீதிகளில் போட்டு உடைப்போம்! எரிப்போம்!'' என்ற மைய முழக்கங்கள் அனைத்து தரப்பு மக்களிடமும் பதியும் வண்ணம் ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

★ விருத்தாசலத்தில் மனித உரிமை பாதுகாப்பு கவுன்சிலின் சார்பில் கடந்த மார்ச் 25 அன்று ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பு தொடங்கிய பேரணி அமெரிக்காவின் போர் வெறியை அம்பலப்படுத்தும் முழக்கங்களுடன், பேருந்து நிலையத்தை அடைய ஆர்ப்பாட்டம் தொடங்கியது. ஆர்ப்பாட்டத்தில் வழக்கறிஞர்கள், உழைக்கும் மக்கள் மட்டுமின்றி திரளாக இசுலாமியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். போர் குற்றவாளி புஷ்சை எதிர்த்து உலகம் முழுவதும் உழைக்கும் மக்கள் அணிதிரள வேண்டியதை வலியுறுத்தும் விதமாக பங்கேற்ற தோழர்களின் உரை அமைந்திருந்தது.

★ தருமபுரி மாவட்டத்திலுள்ள மத்தூரில் கடந்த ஏப்ரல் 12-ஆம் தேதி மத்தூர் அரசு மேல்நிலை பள்ளியிலிருந்து போர் எதிர்ப்பு பேரணி தொடங்கியது. பேரணியின் இறுதியில் மத்தூர் பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் வி.வி.மு. தோழர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் அருண் சிறப்புரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தின் போதும், பிரச்சாரத்தின் போதும் இஸ்லாமியர்கள், மாணவர்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் ஆதரவு தெரிவித்தனர்.

★★★

## வாசகர் கடிதம்

★ பாசிச ஜெயா அரசு உலக வங்கியின் கைக்கூலியாக இருந்து தமிழகத்தில் ஆறு கோடி மக்களின் வாழ்வைச் சூறையாடி வருகிறது. உழைக்கும் மக்கள் பட்டினிச் சாவு, தற்கொலை, உடல் உறுப்புகளை விற்பது என்ற நிலைமைகளுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவற்றை முறியடிக்க வேண்டுமானால் உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து வரிவிதிப்புகளையும், கட்டண உயர்வுகளையும் ஏற்க மறுத்து எதிர் தாக்குதல் தொடுப்பதுதான் ஜெயா அரசைப் பின்வாங்கச் செய்யும் என்று பு.ஜ. விளக்கியிருப்பதே சரியான வழிமுறையாகும்.

*- வாசகர் வட்டம், கோவை.*

★ ஈராக் போர் என்பது எண்ணெய் வளங்களைக் கைப்பற்றுவதற்காகவும் தன்னை உலக ரவுடி என்று அறிவித்துக் கொள்வதற்காகவும் மட்டுமே என்று எண்ணியிருந்தேன். அதற்கு மேலும் பல செய்திகளை பு.ஜ. உணர்த்தியது. உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம், சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றை அடித்து நொறுக்க வேண்டும்; ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவர்கள் அழியும்வரை அதிர்ச்சியும் பீதியும் ஊட்ட வேண்டும் என்று முடித்திருப்பதே சரி. ஏனென்றால், நம் முன்னோர்கள் சொல்வதைப் போல முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்.

*- நளினி, மதுரை.*

★ மக்களுக்காக வாழ்ந்து மரணத்தை வென்ற தோழர் பீட்டரின் தியாகம் நெஞ்சைக் கனக்கச் செய்தது. நம் போர்க் குணத்தைக் கொழுந்துவிட்டெரிய செய்தது. ''கிரிமினல்களாக போலீசு'' கட்டுரையில், 'போலீசு நாய்களின் வாலை நிமிர்த்திக் கொண்டிருப்பது நமது வேலையில்லை; மக்கள் குழுக்களைக் கட்டி அமைப்போம், போலீசு படையை விரட்டியடிப்போம்' என்ற அறைகூவல் உரமூட்டியது.

*- மாவோ ப்ரியன், மதுரை.*

★ கடந்த சில மாதங்களாய் தொடர்ந்து பு.ஜ. இதழ் வாசித்து வருகின்றேன். வறட்சியின் காரணமாக விவசாயிகள் வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவித்த போது பல்வேறு அரசியல் கட்சிகள் விவசாயிகளின் ஓட்டைக் களவாடும் வகையில் இலவச உணவு என்றும், அரிசி தர வேண்டுமென்றும், அரிசியும் பணமும் தரவேண்டுமென்றும் மலிவான வழியில் அரசியல் நடத்தும்போது, ''நிலத்தைக் கொடு! நீரைக் கொடு! நாங்கள் உழைப்பாளிகள்!'' என்ற உங்கள் முழக்கம் சிலிர்க்க வைத்தது. இது பாட்டாளி வர்க்கத்துக்கே உரித்தான குரலாகும்.

*- பி.ஜெ. ராமன், திருவொற்றியூர்.*

★ சென்ற இதழ் தலையங்கம் படித்தேன். உலக வங்கியின் ஆணைப்படித்தான் இலவச மின்சாரத்தை நிறுத்துகிறேன் என்று பாசிச ஜெயா வெளிப்படையாக அறிவித்துவிட்டு ''நான் உங்களுக்கு இலவச மின்சாரத்துக்குப் பதில் மானியம் தருகிறேன், இதனால் 250 ரூபாய் மிச்சமாகும்'' என்றும் கூறுவது ஜெயாவின் வக்கிரத்துக்கும், மோசடித்தனத்துக்கும் எடுத்துக்காட்டாகும். இந்த உண்மைகளையும் எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகளின் கையாலாகாத்தனத்தையும் பு.ஜ. எடுப்பாக உணர்த்தியது.

*- வே. முகிலன், திருச்சி.*

**Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.**

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42049/85 Regn.No.TN/PMG(CCR)/621/03-05
www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



இந்தப் படத்தைப் பார்க்கும் பொழுது, முதல்வர் ஜெயா, ஏதோவொரு நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றும். ஆனால், உண்மை அது வல்ல. அவர், கோட்டையில் உள்ள முதல்வர் அறையில் அமர்ந்து கொண்டே, ''ஒளிப்பேழை கருத்தரங்க வலைப் பின்னல்'' என்ற தகவல் தொழில் நுட்பத்தின் மூலம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியாளரிடம் ''நேருக்கு நேர்'' உரையாடுகிறார். இந்தத் தொழில் நுட்பம் மூலம் முதல்வர், தனது அறையில் இருந்துகொண்டே, தமிழகத்தின் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்ட போலீசு அதிகாரிகள், அமைச்சர்கள், அமைச்சகச் செயலர்கள் ஆகியோரைத் தொடர்பு கொண்டு, நாட்டு நடப்புகளைப் பற்றியும், அரசாங்கத்தின் செயல்பாடுகள் பறறியும் கேட்டு அறிந்து கொள்ள முடியும்; உடனுக்கு உடன் உத்தரவும் போட முடியும்.

இதை ''மின்னணு ஆட்சி'' எனச் செல்லமாக அழைக்கிறார்கள்; தாராளமயத்தின் மூலம் கிடைத்த வரப்பிரசாதம் என்கிறார்கள். இந்த மின்னணு ஆட்சியில், இந்தியாவிலேயே தமிழகம் தான் முதலிடத்தில் இருக்கிறது என மார்தட்டிக் கொள்கிறார் 'புரட்சி'த் தலைவி. தமிழகத்தில் கோலோச்சும் இந்தப் 'புரட்சிகர' ஆட்சியின் இன்னொரு பக்கம் என்ன?



ராசிபுரம் அருகேயுள்ள கூனவேலம்பட்டி புதூரைச் சேர்ந்த விசைத்தறி தொழிலாளர்களுக்காக தி.மு.க., கஞ்சித் தொட்டி அமைத்து கஞ்சி ஊற்றுவதுதான் இந்தப் படம். கைத்தறி நெசவாளிகள், தஞ்சை விவசாயிகள் - இவர்களையடுத்து தமிழகத்தின் விசைத்தறித் தொழிலாளர்களும் பட்டினியின் கோரப் பிடிக்குள் சிக்குண்டு போனதற்கு என்ன காரணம்?

மைய அரசு இந்த ஆண்டு பட்ஜெட்டில் விசைத்தறியில் தயாரிக்கப்படும் துணிகள் மீது 10 சதவீத கலால் வரியை விதித்துள்ளது. தாராள இறக்குமதியின் காரணமாக ஏற்கனவே மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் விசைத்தறி தொழிலுக்கு, இந்த வரிவிதிப்பு ஒரேயடியாக சங்கு ஊதிவிட்டது.

இந்த வரிவிதிப்பையடுத்து, தமிழகத்தில் ஓடிக் கொண்டிருந்த ஏழரை இலட்சம் விசைத்தறிகளும் நிறுத்தப் பட்டு விட்டன; இதனால் இந்தத் தொழிலை மட்டுமே நம்பி வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த இருபது இலட்சம் விசைத்தறி தொழிலாளர்கள் பட்டினிச் சாவின் பிடிக்குள் தள்ளப் பட்டு விட்டனர்.

விசைத்தறிகள் நிற்காமல் ஓடிக் கொண்டிருந்த பொழுது கூட, சிறுநீரகத்தை விற்று காலத்தைத் தள்ள வேண்டிய அவலத்தில் வாழ்ந்து வந்த விசைத்தறித் தொழிலாளர்களிடம், இப்பொழுது விற்பதற்கு என்ன மிஞ்சியிருக்கும்?

கைத்தறி நெசவாளிகள் பட்டினி கிடந்த பொழுது பிரியாணி போட்டு அவமானப்படுத்திய ஜெயாவிடம், தஞ்சையைச் சேர்ந்த கூலி விவசாயியின் மகன் பிரகாஷ் என்ற சிறுவன் பட்டினியால் சுருண்டு விழுந்து செத்துப் போனதை, வயிற்று வலியால் இறந்து போனதாகக் கதை கட்டிய ஜெயாவிடம், விசைத்தறி தொழிலாளர்கள் அனுதாபத்தையும், உதவியையும் எதிர்பார்க்க முடியுமா?

ரோம் நகரம் தீப்பற்றி எரிந்த பொழுது, நீரோ மன்னன் பிடில் வாசித்து மகிழ்ந்ததைப் போல இருக்கிறது ஜெயாவின் ஆட்சி. தமிழகத்தின் கைத்தறி நெசவாளிகள், விவசாயிகள், விசைத்தறி தொழிலாளர்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் நிற்கும் பொழுது, ஜெயாவோ மின்னணு ஆட்சி பற்றி தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்.

உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அத்தியாவசியத் தேவைகளுக்கு எந்த உத்தரவாதமும் கிடையாது; பட்டினிச் சாவிற்கு மட்டுமே உத்தரவாதம் உண்டு என்பதுதான் ஜெயாவின் மின்னணு ஆட்சி என்றால், இந்த வக்கிரம் பிடித்த ஆட்சியை இன்னும் நாம் ஏன் சகித்துக் கொள்ள வேண்டும்? ❑